Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37
கதிர் : 300

வியாழக்கிழமை
22 செப்ரெம்பர் 2022

புரட்டாதி 05 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2053

பக்கங்கள்: 12
விலை : ரூ. 50

### தமிழர்களின் பூர்வீகமான

# காணிகளைக் கையகப்படுத்தாதே! குருந்தூர்மலையில் போராட்டம்

**முல்லைத்தீவு, செப்ரெம்பர் 22**

**தண்ணிமுறிப்பு, குருந்தூர்மலையைச் சூழவுள்ள தமிழ் மக்களின் பூர்வீகக் காணிகளை தொல்லியல் திணைக்களம் கையகப்படுத்துவதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும், நீதிமன்றக் கட்டளையை மீறி பௌத்த கட்டுமானம் மேற்கொள்ளப்படுவதைக் கண்டித்தும் நேற்றுக் குருந்தூர்மலையில் பெரும் ஆர்ப்பாட்டம் ஒன்று மக்களால் முன்னெடுக்கப்பட்டது.**

11





## ரவிகரன், மயூரன் நேற்றிரவு கைது!

முல்லைத்தீவு, செப்.22
தண்ணிமுறிப்பு, குருந்தூர் மலைப் பகுதியில் தமிழ் மக்களுக்குச் சொந்தமான பூர்வீக இடங்கள் அபகரிக்கப்படுகின்ற

11

### போதைக்கு அடிமையான

## பிள்ளைகளை புனர்வாழ்வுக்கு ஒப்படைக்கும் பெற்றோர்

யாழ்ப்பாணம், செப். 22
உயிர்கொல்லி ஹெரோய்னுக்கு அடிமையான தமது பிள்ளைகளை, புனர்வாழ்வுக்கு பெற்றோர் ஒப்படைக்கும் சம்பவங்கள் யாழ். மாவட்டத்தில் இந்த வாரம் அதிகரித்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. சுன்னாகம் பொலிஸ்

11

## மூதாட்டியின் சடலம் மீட்பு

யாழ்., செப்.22
வட்டுக்கோட்டை, பிளவத்தையிலுள்ள கிணறு ஒன்றில் இருந்து 70 வயது வயோதிபப் பெண் ஒருவரின் உடல் மீட்கப்பட்டுள்ளது.

11

## பணவீக்கம் சாதனை!

கொழும்பு, செப்.22
சிறிலங்கா வரலாற்றில் அதிகபட்ச பணவீக்க விகிதம் கடந்த ஓகஸ்ட் மாதம் பதிவாகியுள்ளது.

11

## கொரோனா; மூவர் சாவு!

கொழும்பு, செப்.22
கொரோனாத் தொற்றால் மேலும் மூவர் உயிரிழந்துள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

11



"அடாத்தா காணி பிடிச்சால் ஆவலட்டம் பிடிக்கிறதும், தட்டிக்கேட்டால் கைது செய்யிறதும் தானே இஞ்ச நீதி"

## ஹெரோய்ன் விற்பனை குருநகரில் ஒருவர் கைது

யாழ்., செப்.22
யாழ்ப்பாணம், குருநகர் பகுதியில் உயிர்கொல்லியான ஹெரோய்ன்

11

## ஹெரோய்ன் விற்ற 11 வயதுச் சிறுமி!

### யாழில் அதிர்ச்சி சம்பவம்

யாழ்ப்பாணம், செப்.22
யாழ்ப்பாணம், பொம்மைவெளிப் பகுதியில் உயிர்கொல்லியான ஹெரோய்ன்

11

## வர்த்தமானியில் 'வவுனியாவ'!

### வடக்கு அவைத் தலைவர் அவசர கடிதம்

யாழ்ப்பாணம், செப்.22
வவுனியா நகர சபை, மாநகர சபையாக தரமுயர்த்தப்பட்டுள்ள நிலையில் அது தொடர்பாக வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலில் வவுனியா என்னும் பெயர் 'வவுனியாவ 'என்று மாற்றப்பட்டுள்ளது.
இது தொடர்பாகக் கவனம் செலுத்த வேண்டுமென்றும், உரிய திருத்தத்தை மேற்கொள்ளவேண்டுமென்றும் வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வீ.கே. சிவஞானம், வடக்கு

11

### வலிகாமம் கல்வி வலயத்தில்

## போதைக்கு எதிரான ஆசிரியர் எவரும் இடமாற்றப்படவில்லை

### "உதயன்" செய்தி தொடர்பில் வலயக் கல்விப் பணிப்பாளர் விளக்கம்

யாழ்ப்பாணம், செப்.22
வலிகாமம் வலயப் பாடசாலைகள் எவற்றிலும் போதைப்பொருள் பாவனையுடன் தொடர்புடைய மாணவரை இனங்கண்டமைக்காக ஆசிரியர் எவ ரும் இடமாற்றப்படவில்லை என்று

11

## பாதுகாப்பு நிதி ஒதுக்கீட்டில் வடக்கு - கிழக்கில் அபகரிப்பு

### நாடாளுமன்றில் சுட்டிக்காட்டிய சித்தார்த்தன்

கொழும்பு, செப்.22
வடக்கு, கிழக்கில் தொல்பொருள் திணைக்களத்தால் பௌத்த மயமாக்கல் தீவிரமாக நடக்கின்றது. இந்துக் கோயில்கள் தொல்பொருள் திணைக்களத்தின் கீழ் கொண்டு வரப்படுவதுடன், பௌத்த விகாரைகள் அமைக்கும் நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படுகின்றன. பாதுகாப்புக்கென ஒதுக்கப்படும் நிதி இதற்காகவே பயன்படுத்தப்படுகின்றது.
- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்

11

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## சுகாதாரத் துவாய்கள்; மாணவிகள் பாதிப்பு

*சஜித் தெரிவிப்பு*

பாடசாலை செல்லும் மாணவிகளுக்குத் தேவையான சுகாதாரத் துவாய் (Sanitary Products) தொடர்பில் பெரும் பிரச்சினை எழுந்துள்ளது. இதன் காரணமாக அதிகமான மாணவிகள் பாதிக்கப்பட்டு பாடசாலைகளுக்குச் செல்லமுடியாத நிலை தோன்றியுள்ளது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் தெரிவிக்கையில்:

அன்று சுகாதாரத் துவாய் பிரச்சினை குறித்து பேசிய போது அதிகமானவர்கள் கேலி செய்தாலும் இன்று அந்தப் பிரச்சினை உக்கிரம் அடைந்துள்ள பின்னணியில், உரிய அதிகாரிகள் அதற்கான தீர்வைத் துரிதமாகப் பெற்றுக் கொடுப்பது அவசியம்- என்றார். (ஒ-14,இ)

## சுகாதாரத் துவாயின் வரி குறைக்கப்படும்

கொழும்பு, செப். 22

பாடசாலை மாணவிகளுக்குத் தேவையான சுகாதாரத் துவாய்களுக்கு விதிக்கப்படும் வரியைக் குறைக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது என பெண்கள் மற்றும் சிறுவர் இராஜாங்க அமைச்சர் கீதா குமாரசிங்க தெரிவித்துள்ளார்.

தற்போது பெண்களுக்கான சுகாதாரத் துவாய்களுக்கு 42வீத வரி விதிக்கப்படுவதே அவற்றின் விலை உயர்வுக்கு காரணமாக அமைந்துள்ளது.

ஆகவே சுகாதாரத் துவாய்களுக்கு விதிக்கப்படும் வரியைக் குறைக்க அரசாங்கம் ஒரு தீர்வைக் கொண்டு வரவேண்டும் என்று விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய அதற்கான வரிக் குறைப்பு நடவடிக்கையை ஜனாதிபதி மேற்கொண்டுள்ளார் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

## சுகாதாரத் துவாய்கள் தயாரிக்கத் திட்டம்

கொழும்பு, செப். 22

இலங்கையில் சுகாதாரத் துவாய்களைத் தயாரிக்கும் திட்டத்தை தொடங்குவது தொடர்பாக 'பாட்மான்' என அழைக்கப்படும் தமிழகத் தொழில் முயற்சியாளர் அருணாசலம் முருகநாதனுடன் தொடர்ந்தும் கலந்துரையாடப்பட்டு வருகின்றன என்று சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல நேற்று தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் கருத்துத்தெரிவிக்கும்போதே இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

"இலங்கையில் சுகாதாரத் துவாய்களைத் தயாரிக்கும் திட்டத்தை தொடங்குவதற்கு தமிழகத்தின் சுகாதாரத் துவாய் தயாரிப்பாளர்களுடன் பேச்சு நடத்தி வருகிறோம்.

இது இலங்கையில் உள்ள பெண்கள் மற்றும் சிறுமிகள் எதிர்கொள்ளும் ஒரு பிரச்சினை என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன். இருப்பினும் இது எங்கள் கலாசார மற்றும் சமூகக் கட்டுப்பாடுகளின் விளைவாக இலங்கையில் பொதுமக்கள் மத்தியில் பரவலாக விவாதிக்கப்படவில்லை- என்றார். (ஒ-14,இ)




## நல்லிணக்கத்தை வலியுறுத்தி யாழில் அமைதிவழிப் பேரணி

யாழ்ப்பாணம், செப். 22

உலக சமாதான தினத்தையொட்டி சமாதானத்தையும் நல்லிணக்கத்தையும் இனஒற்றுமையையும் வலியுறுத்தி யாழ்ப்பாணத்தில் நேற்று அமைதிப் பேரணி ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் மாவட்ட மகளிர் அபிவிருத்தி திணைக்களத்தின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்ட இந்தப் பேரணி யாழ்ப்பாணம் பிரதான பேருந்து நிலையத்தில் ஆரம்பித்து நெடுந்தூர பேருந்து நிலையத்தில் நிறைவடைந்தது.

இதன்போது பெண்கள் அமைப்பினர், பெண் பிரதிநிதிகள், மகளிர் அபிவிருத்திக் குழுக்களின் உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (ச-20)

# நிவாரணம் இல்லை; வாக்குறுதி மாத்திரமே

*சிற்றுண்டி உரிமையாளர் சங்கத் தலைவர் ஆதங்கம்*

**கொழும்பு, செப். 22**

**அரசாங்கம் மக்களுக்கு உறுதியளித்த அத்தியாவசியப் பொருள்களுக்கான நிவாரணம் தொடர்பில் இதுவரை எந்தவித நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வில்லை. வெறும் வாக்குறுதிகளை மாத்திரமே வழங்குகின்றது.**

இவ்வாறு அகில இலங்கை சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் அசேல சம்பத் கவலை வெளியிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்:

அரசாங்கம் மக்களுக்கு உறுதியளித்த அத்தியாவசியப் பொருள்களுக்கான நிவாரணம் அவர்களது இறப்புக்கு பின்னரே கிடைக்கப்பெறும். நாட்டில் மக்கள் தினம்தினம் பட்டினிச் சாவை எதிர்நோக்கிக் கொண்டிருக்கின்றனர்.

வெறும் வாக்குறுதிகளால் மாத்திரம் மக்கள் உயிர்வாழ இயலாது. இதுவரையிலும் கூறி ஏதேனுமொரு வாக்குறுதிகளை நிறைவேற்றினார்களா? ஆகவே தற்போதுள்ள அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களையும் நீக்கி விட்டு, நாட்டின்மீது பற்றுக் கொண்ட, ஜனநாயகத்தை மதிக்கும் புதியவர்கள் பதவியேற்று, பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்கவேண்டும் - என்றார். (ச-இ)

## அமைச்சுகளைப் பெற்றவர்கள் கட்சிப் பதவிகளிலிருந்து நீக்கம்

*சுதந்திரக் கட்சி அதிரடி*

கொழும்பு, செப். 22

அமைச்சுப் பதவிகளைப் பெற்ற சுதந்திரக் கட்சியின் 8 நாடாளுமன்ற உறுப்பினர்கள் கட்சியில் வகித்திருந்த பதவிகளில் இருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

அதற்கமைய, மாவட்டத் தலைவர்கள், தொகுதி அமைப்பாளர்கள் உள்ளிட்ட பதவிகள் மற்றும் மத்திய செயற்குழுவின் உறுப்பினர் பதவிகளிலிருந்தும் சம்பந்தப்பட்டவர்களை நீக்குவதற்கு கட்சியின் தலைவர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

மஹிந்த அமரவீர, நிமால் சிறிபால டி சில்வா, லசந்த அழகியவன்ன, சாந்த பண்டார, சுரேன் ராகவன், சாமர சம்பத் தஸநாயக்க, ஜகத் புஷ்பகுமார, ரஞ்சித் சியம்பலாபிட்டிய ஆகியோரே கட்சிகளில் வகித்த பதவிகளில் இருந்து நீக்கப்பட்டுள்ளனர். (ம)



## அமெ. நிதியுதவி தொடர்பில் அலிசப்ரி கலந்துரையாடல்

கொழும்பு, செப். 22

வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரிக்கும் அமெரிக்காவின் சர்வதேச அபிவிருத்தி முகவர் அமைப்பின் உதவி நிர்வாகியான ஐசோபெல் கோல்மேன் ஆகியோருக்கும் இடையில் சந்திப்பொன்று நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

ஐக்கிய நாடுகள் கூட்டத்தொடரில் உரையாற்றுவதற்கான வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி அமெரிக்காவில் தங்கியுள்ள நிலையில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க முகவரகத்தின் நிர்வாகி சமந்தா பவர் இலங்கைக்கு பயணம் மேற்கொண்டபோது விவசாயிகளின் தேவைக்காக 40 மில்லியன் டொலரும் உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களுக்கான மனிதாபிமான உதவியாக 20 மில்லியன் டொலரும் அமெரிக்காவால் வழங்கப்படவுள்ளது எனத் தெரிவித்திருந்தார். இந்தநிலையில் இந்த அறிவிப்புகளைச் செயற்படுத்துவது குறித்த விடயங்கள் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டது. (ச-இ)

## மன்னார் மாவட்ட சட்டத்தரணிகள் நாளை வரை பணிப்பகிஷ்கரிப்பு

மன்னார், செப். 22

மன்னார் மாவட்ட சட்டத்தரணிகள் அனைவரும் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை முதல் நீதிமன்ற செயற்பாடுகளில் ஈடுபடாது பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

மன்னார் மாவட்ட சட்டத்தரணிகள் தங்களுக்கும் மக்களுக்கும் ஏற்பட்ட பாதிப்புக்கள் தொடர்பாக ஆராய்ந்து எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கமைவாக நாளை வெள்ளிக்கிழமை வரை தற்காலிக பணிப்பகிஷ்கரிப்பை முன்னெடுத்துள்ளனர். அத்துடன் தாம் முன்னெடுத்துள்ள பணிப்பகிஷ்கரிப்பு தொடர்பான காரணங்களைச் சுட்டிக்காட்டி நீதிச் சேவை ஆணைக்குழுவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்ததுடன் அதன் பிரதிகளை இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் மற்றும் மன்னார் நீதிமன்றங்களுக்கும் அனுப்பி வைத்துள்ளனர்.

இந்தப் பணிப்பகிஷ்கரிப்பு தினங்களில் வெளிமாவட்டங்களிலிருந்து மன்னார் நீதிமன்றங்களுக்கு வரும் சட்டத்தரணிகள் வழக்குகளில் முன்னிலையாகி வருவதால் பணிப்பகிஷ்கரிப்பு தொடருகின்றபோதும் மன்னார் நீதிமன்றங்களில் அழைக்கப்படும் வழக்குகள் வழமை போன்று நடைபெறுகின்றன எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-60)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மக்கள் மயப்பட்ட நிறுவனங்களை அதிகாரிகள் நிர்வகிக்கக்கூடாது!

## தேர்தல்கள் திணைக்கள ஆணையாளர் தெரிவிப்பு

**கொழும்பு, செப். 22**

**அரசாங்கம் விரைவில் மாகாணசபைத் தேர்தலை நடத்தவேண்டும். மக்கள் மயப்படுத்தப்பட்ட நிறுவனங்களை அதிகாரிகள் நிர்வகிக்க முடியாது. அதிகாரப்பகிர்வு இருந்தால் மட்டுமே நல்லாட்சி இடம்பெறும் என இலங்கை தேர்தல்கள் திணைக்களத்தின் ஆணையாளர் நிமல் ஜி.புஞ்சிஹேவா தெரிவித்தார்.**

யாழ்.மாவட்டச் செயலகத்தில் தேர்தல் திருத்தச் சட்டங்கள் தொடர்பாக நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலின்போது கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மாகாண சபைகளுக்கு நிதியொதுக்கப்படுகின்றது. மாகாணசபையினர் வருமான திரட்டலில் ஈடுபடுகின்றார்கள். அப்படியாயின் மாகாண சபையில் யார் இல்லை? மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் மாத்திரமே இல்லாமல் இருக்கின்றார்கள். தேர்தல் ஆணைக்குழுவின் நிலைப்பாடு என்னவென்றால் எந்தவொரு மக்களின் அதிகாரம் பொருந்திய நிறுவனமும் அதிகாரிகளால் நிர்வகிக்கப்படக்கூடாது. அங்கு ஜனநாயக தேர்தலின் மூலம் தெரிவுசெய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகளும் இருக்க வேண்டும். இந்த நிலையில்தான் மாகாணசபைத் தேர்தலை விரைவில் நடத்த வேண்டும்.

புதிய முறையிலோ அல்லது பழைய முறையிலோ தேர்தலை நடத்துவது என்பது எங்களுடைய ஆணைக்குழுவுக்கு முக்கியமானது அல்ல. ஆனால், மிக விரைவில் நடத்துவதாக இருந்தால் பழைய முறையில் தேர்தலை நடத்தலாம். மக்கள் பிரதிநிதிகளின் அதிகாரம் மாத்திரம் அல்ல அந்த நிறுவனங்களின் அதிகாரமும் பன்முகப்படுத்தப்படவேண்டும். இவ்வாறு அதிகாரப்பகிர்வு இடம்பெறுகின்ற பொழுதுதான் ஒரு நாட்டில் நல்லாட்சியை ஏற்படுத்த முடியும். எதிர்காலங்களில் சபைகளின் காலம் நிறைவடைந்தவுடன் மக்களின் பிரதிநிதிகளைக் கலைத்துவிட்டு அதிகாரிகளின் கையில் மக்கள் மயப்படுத்தப்பட்ட நிறுவனங்களை நிர்வகிப்பதற்குத் தேர்தல் திணைக்களம் ஒருபோதும் இணங்காது. அரசாங்கத்தின் அனுமதி கிடைக்கப்பெற்றால் நாளைய தினம்கூட எங்களால் மாகாண சபைத் தேர்தலை நடத்த முடியும்- என்றார். (ம-125)

# மாட்டைக் கொண்டு சென்ற நபர் பொதுமக்களால் மடக்கிப்பிடிப்பு

யாழ்ப்பாணம், செப். 22

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அராலிப் பகுதியில் அனுமதிப்பத்திரமின்றி இறைச்சிக்காக மாட்டை ஓட்டோவில் கொண்டு சென்றவரை பொது மக்கள் மடக்கிப்பிடித்து வட்டுக்கோட்டைப் பொலிஸாரிடம் நேற்றுமுன்தினம் மாலை ஒப்படைத்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் அராலிப் பகுதியில் சந்தேகத்துக்கிடமான முறையில் மாடு ஒன்றைத் தலை கீழாகக் கட்டி ஓட்டோவில் கொண்டுசென்றபோது அந்தப்பகுதி மக்கள் ஓட்டோவை வழிமறித்து மடக்கிப்பிடித்தனர்.

அதன்பின் இதுதொடர்பில் வட்டுக்கோட்டைப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கினர்.

தகவலையடுத்து குறித்த இடத்துக்கு விரைந்த வட்டுக்கோட்டைப் பொலிஸார், விசாரணைகள் மூலம் அனுமதிப்பத்திரமின்றி மாட்டை இறைச்சிக்காக எடுத்துச்செல்வதைக் கண்டறிந்தனர்.

அதனையடுத்து நாவாந்துறைப் பகுதியைச் சேர்ந்த 30 வயதான ஒருவரைக் கைது செய்தனர். அத்துடன் கைதுசெய்யப்பட்டவரிடமிருந்து மீட்கப்பட்ட மாடு வட்டுக்கோட்டைப் பொலிஸ் நிலையத்தில் ஆரோக்கியமாகவுள்ளது என்று வட்டுக்கோட்டைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஒ-14,125)

# நிபந்தனை மீறி மணல் ஏற்றிய சாரதி கைது!

யாழ்ப்பாணம், செப். 22

அனுமதிப்பத்திரத்தின் நிபந்தனையை மீறி மணல் ஏற்றி வந்த குற்றச்சாட்டில் டிப்பருடன் சாரதி கைதுசெய்யப்பட்டார் என்று அச்சுவேலிப் பொலிஸார் நேற்றுமுன்தினம் தெரிவித்தனர்.

அச்சுவேலி, நீர்வேலிப்பகுதியில் வந்த டிப்பரை காங்கேசன்துறை மாவட்ட விசேட குற்றத்தடுப்புப் பொலிஸார் சோதனைக்குட்படுத்தினர். அதன்போது அனுமதிப்பத்திரத்தில் வழங்கப்பட்டுள்ள நிபந்தனையை மீறி கண்டாவளை மணல் ஏற்றியமை கண்டறிப்பட்ட நிலையில் சாரதியான சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார். (ஒ-14,23)

# போதை மாத்திரைகளுடன் இரு சந்தேகநபர்கள் கைது!

யாழ்ப்பாணம், செப். 22

புத்தூர்மேற்கு, நவக்கிரிப் பகுதியில் போதை மாத்திரைகளுடன் சந்தேகநபர்கள் இருவர் கைது செய்யப்பட்டனர் என்று அச்சுவேலி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கடந்த திங்கட்கிழமை தெரிவித்தார்.

சந்தேகநபர்கள் இருவரும் அண்மைக்காலமாக போதைமாத்திரைகளை விற்பனை செய்து வருகின்றனர் என்று பொலிஸாருக்குத் தகவல் கிடைத்தது.

அதற்கமைவாக சிவில் உடையில் நவக்கிரிப் பகுதிக்குச் சென்ற அச்சுவேலிப் பொலிஸார் போதைமாத்திரைகளை வாங்குவதுபோல் நடித்து சந்தேகநபர்கள் இருவரையும் கைது செய்தனர். அத்துடன் அவர்களிடமிருந்து 87 போதைமாத்திரை வில்லைகளும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன. கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கள் 19 மற்றும் 27 வயதுடையவர்கள் எனத் தெரிவித்த அச்சுவேலி பொலிஸார் இதுதொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துவருகின்றனர். (ஒ-14,23)

## யாழ்.ஆரோக்கிய நகரத்திட்டத்தின்கீழ்

# மூன்று பாடசாலை வீதிகள் ஒருவழிப் பாதையாகின்றன

யாழ்ப்பாணம், செப். 22

யாழ்.ஆரோக்கிய நகரத்திட்டத்தின்கீழ் 3 பாடசாலை வளாக வீதிகள் தெரிவு செய்யப்பட்டு, குறிப்பிட்ட நேரத்துக்கு ஒருவழிப்பாதை வீதிகளாக நடைமுறைப்படுத்தி துவிச்சக்கரவண்டிப் பாவனைக்கென மாத்திரம் விடப்படவுள்ளது என யாழ்.மாநகரசபை முதல்வர் வி.மணிவண்ணன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் ஊடகங்களுக்கு அனுப்பிவைத்த அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-

யாழ்.ஆரோக்கிய நகரத்திட்டத்தின்கீழ் சைக்கிள் பாவனையை ஊக்குவிக்கவும் வீதி விபத்துக்களைக் குறைக்கும் நோக்குடனும் பல்வேறு அரச மற்றும் அரச சார்பற்ற பங்குதாரர்களின் ஆதரவுடன் இந்தச் செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

அதன்படி யாழ்.இந்துக்கல்லூரி மற்றும் யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலைகளை அண்மித்த பகுதிகள் ஒரு வழிப்பாதையாக குறிப்பிட்ட நேரத்துக்கு நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

அதாவது பாடசாலை வேளைகளான காலை 6.45 மணிமுதல் 8 மணிவரையும் பின் பிற்பகல் ஒரு மணிமுதல் 2 மணிவரையும் இவ்வாறு துவிச்சக்கரவண்டி பாவனைக்கென ஒருவழிப் பாதையாக நடைமுறைப்படுகின்றது.

இதன்போது பின்வரும் 3 வழிமுறைகளை மக்கள் கடைப்பிடித்தல் வேண்டும்.

முதலாவது வழிமுறையாக கஸ்தூரியார் வீதி ஒரு வழிப்பாதையாகக் கொண்டு



வரப்படுகின்றது. அரசடி வீதியிலிருந்து கஸ்தூரியார் வீதிக்குள் உள்நுழையும் வாகனங்கள் சுற்றுச்சந்தியை (Roundabout) அடைந்து வலது பக்கமாக கல்லூரி வீதிக்குள் திரும்புவது தடைசெய்யப்பட்டுள்ளது.

இரண்டாவது கே.கே.எஸ். வீதியிலிருந்து சுற்றுச்சந்தி வரையான கல்லூரி வீதி ஒரு வழிப்பாதையாகக் கொண்டு வரப்படுகின்றது. இங்கு கே.கே.எஸ். வீதியிலிருந்து யாழ். இந்துக்கல்லூரி நுழைவாயிலை அடையும் வாகனங்கள் சுற்றுச்சந்தியை அடைந்து வலது மற்றும் நேரான வீதிகளினூடாக வெளிச் செல்லமுடியும்.

மூன்றாவதாக கல்லூரி ஒழுங்கை துவிச்சக்கரவண்டிப்பாவனைக்கு மாத்திரமே ஒதுக்கப்பட்டுள்ளது என்பனவாகும்.

இந்தத் திட்டமானது பாதுகாப்புமிக்க வீதிகளை பாடசாலைச் சமூகத்துக்கும் பொதுமக்களுக்கும் ஏற்படுத்திக்கொடுப்பதை நோக்கமாகக்கொண்டு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்தவீதி வழிமுறைகள் உள்ளடங்கிய பதாகைகள் குறிப்பிட்ட வீதிகளில் இன்றுமுதல் வைக்கப்படும்- என்றுள்ளது. (ச-20)

# வாள்களுடன் இருவர் கைது!

யாழ்ப்பாணம், செப். 22

மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இரு வாள்களுடன் இளைஞர்கள் இருவரை யாழ்.மாவட்ட குற்றத்தடுப்புப் பொலிஸார் கைதுசெய்து மானிப்பாய் பொலிஸாரிடம் நேற்றுமுன்தினம் ஒப்படைத்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட இரு இளைஞர்களும் வட்டுக்கோட்டைப் பகுதியைச்சேர்ந்த 22 மற்றும் 23 வயதானவர்களாவர். குறித்த இருவரும் அண்மைக்காலமாக மானிப்பாய் பகுதியில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களுடன் தொடர்புபட்டவர்கள் என சந்தேகம் வெளியிட்டுள்ள மானிப்பாய் பொலிஸார், இது தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஒ-14,125)

# பொதுக்கூட்டமும் நிர்வாகத்தெரிவும்

யாழ்ப்பாணம், செப். 22

காரைநகர் அபிவிருத்திச் சபையின் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகசபைத்தெரிவும் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 2 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு காரைநகர் அபிவிருத்திச்சபை நூலக மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (ஒ-14,20)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## முருகேசு இராசேந்திரம்

நவாலி மானிப்பாயை பிறப்பிடமாகவும் உடுவில் சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு இராசேந்திரம் 20.09.2022 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு - நாகம்மா ஆகியோரின் புதல்வனும் கனகசபாபதி-சின்னம்மா ஆகியோரின் மருமகனும் சிவபாக்கியத்தின் அன்புக்கணவரும் மானிப்பாயை சேர்ந்த கணபதிப்பிள்ளை, நடராசா ஆகியோரின் மருமகனும் ஆஷா, அன்ரி ஆகியோரின் அன்புச்சகோதரனும் சிவசோதி(டென்மார்க்), சிவனேஸ்வரி, ராஜ்குமார் (ஜேர்மனி), சிவாஜினி (டென்மார்க்) ஆகியோரின் அன்புத்தந்தையும் சண்முகநாதன் (டென்மார்க்), சிவானந்தராசா (துபாலகம் யாழ்ப்பாணம்) நளினி(ஜேர்மனி), திவாகரன் (டென்மார்க்) சதீஸ்கரன் நந்தினி (நர்மதா, நிதர்சன், பிரியங்கா, நிவியங்கா, தனுயங்கா, இலக்கியங்கா) டென்மார்க் ஆகியோரின் மாமனாரும் பாலகிருஷ்ணன், விஜயலட்சுமி, துரைசிங்கம் (டென்மார்க்) ஆகியோரின் மைத்துனரும் மல்லிகாதேவி அருள்நந்தினி (டென்மார்க்) மற்றும் காலஞ்சென்ற நவரட்ணராஜா ஆகியோரின் சகலனும் (நிசாந்தன் லக்சனா தர்சனா)டென்மார்க் மயூரதன் கனிஸ்ரா அனுஷா (ஜேர்மனி) குகராம் சகிர்ராம் கேசிகா புவிநஜன் தட்சன் சச்சின் ஆகியோரின் அன்புப்பேரனும் ஜதீஸ்கரன் சந்திரமோகன் பிரதாப், கீர்த்தனா ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 22.09.2022 வியாழக்கிழமை முற்பகல் 10மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று அன்னாரின் பூதவுடல் கொத்தியாலடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

**பிரதேச செயலக வீதி,**
**உடுவில், சுன்னாகம் 0779697275**

**தகவல் :**
**மனைவி, பிள்ளைகள்**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்**

# 1ஆம் ஆண்டு நீங்காத நினைவில்

மண்ணில் 21 . 04 . 1954



விண்ணில் 03 . 10 . 2021

## சின்னத்துரை சிவகடாட்சம் (B.A)

(சட்டத்தரணியும் பிரசித்த நொத்தரிசும்
Solicitor U.K.Advocate Commissioner for Oaths)

திதி: தேய்பிறை துவாதசி

கண்ணீர் பிரளயத்தில் தவிக்கவிட்டு
ஓராண்டாய் சென்றுவிட்டீர்
வேர் அறுந்த விருட்சமாய்
விழுந்து இழந்து தவிக்கின்றோம்
எமன் உங்களில் பாசம் வைத்து
அழைத்து விட்டான் - நாங்களோ
ஏது செய்வது என்று தெரியாமல் தவிக்கின்றோம்.

மானிப்பாய் வீதி, உரும்பிராய்.
(கிருஷ்ணன் கோவிலுக்கு அருகில்)

**குடும்பத்தினர்**

## போதை மாத்திரைகள் வைத்திருந்தோர் கைது

புத்தூர் மேற்கு நவக்கிரிப் பகுதியில் போதை மாத்திரைகள் வைத்திருந்த குற்றச்சாட்டில், இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று அச்சுவேலி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரபாத் தெரிவித்தார்.

இரகசியத் தகவலுக்கமைய சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர் என்றும், அவர்களிடமிருந்து 87 போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டன என்றும் பொலிஸார் தெரிவித்தனர். கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கள் 19 மற்றும் 27 வயது உடையவர்கள் என்று தெரிவித்த பொலிஸார், இவர்கள் தொடர்ச்சியாக போதை மாத்திரை விற்பனையில் ஈடுபடுவது விசாரணையில் தெரியவந்துள்ளது என்றும் தெரிவித்துள்ளனர். (ய-23)

## அரிசியின் விலை அதிகரிக்கும் சாத்தியம்

அரிசியின் விலை எதிர்வரும் முதலாம் திகதி முதல் அதிகரிக்கலாம். ஒரு கிலோ அரிசிக்கு இரண்டரை வீதம் சமூகப் பாதுகாப்பு வரி செலுத்த வேண்டியுள்ளதால் அரிசி வகைகளின் விலையை அதிகரிக்க வேண்டிய நிலைமை உள்ளது என ஐக்கிய அரிசி உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் முதின் பெரேரா தெரிவித்துள்ளார்.

அரிசிக்கு விலையை அதிகரிக்காது விற்பனை செய்ய வேண்டுமாயின் நெல்லைக் குறைந்த விலைக்கு விவசாயிகளிடமிருந்து கொள்வனவு செய்ய வேண்டும். நாட்டில் மக்களுக்குத் தேவையான அரிசி கையிருப்பில் காணப்படுகையில் அரசாங்கம் சர்வதேசத்திடமிருந்து அரிசியை இறக்குமதி செய்கின்றது.

வெளிநாடுகளிலிருந்து அரிசி இறக்குமதி செய்யப்படுவதால் 700க்கும் அதிகமான சிறிய மற்றும் நடுத்தர அரிசி ஆலைகள் தற்போது மூடப்பட்டுள்ளன - என்றார். (எ-இ)

## நாடாளுமன்ற மின்கட்டணம் மாதாந்தம் 60 லட்சம் ரூபா


கொழும்பு, செப்.22

நாடாளுமன்றத்தின் மாதாந்த மின் கட்டணம் 60 இலட்சம் ரூபாவை அண்மித்துள்ளது என்று நடாளுமன்றில் நேற்றுத் தெரிவிக்கப்பட்டது.

ஐக்கிய மக்கள் சக்தியில் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் மன்னப்பெரும நாடாளுமன்றத்தில்கேள்வி நேரத்தின்போது இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தின் மாதாந்த மின்சாரக் கட்டணம் 60 இலட்சம் ரூபா எனவும், அதைக் குறைக்கும் வகையில் சூரிய மின்கலங்கள் மூலம் மின்சாரம் பெறும் முறை தயாரிக்கப்பட வேண்டுமென்றும் அஜித் மன்னப்பெரும குறிப்பிட்டார்.

அதற்குப் பதிலளித்த மின்சக்தி, எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர, நாடாளுமன்றத்தில் 60 இலட்சம் ரூபா மின்சாரக் கட்டணத்தைச் செலுத்துவதற்குப் பதிலாக சூரிய ஒளி மின்சார அமைப்பை ஏற்படுத்துவது அவசியமானது. அதற்கான பணத்தை எமது அமைச்சால் வழங்கமுடியாது. தேவைப்பட்டால் தொழில்நுட்ப ஆதரவை வழங்கமுடியும் என்று தெரிவித்தார். (எ-இ)



## மருந்து விலை 'கிடுகிடு' சோதனைக்கு ஏற்பாடு!

கொழும்பு, செப். 22

மருந்துகளின் விலையில் மாற்றம் செய்ய மருந்தக உரிமையாளர்களுக்கு உரிமை இல்லை. இறக்குமதியாளர் மற்றும் அதன் உற்பத்தியாளர் மட்டுமே மருந்துகளின் விலையில் மாற்றம் செய்ய முடியும் என பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் தெரிவித்துள்ளதாவது:-

நாடளாவிய ரீதியில் தற்போது மருந்துகளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. அதையடுத்துச் சில மருந்தக உரிமையாளர்கள் மருந்துகளின் விலையில் மாற்றம் செய்கின்றனர் என்று முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

இறக்குமதியாளர் மற்றும் அதன் உற்பத்தியாளர் மட்டுமே மருந்துகளின் விலையில் மாற்றம் செய்யமுடியுமே தவிர மருந்தக உரிமையாளர்களுக்கு உரிமை இல்லை.

இது தொடர்பில் மருந்தகங்கள் திடீர் சோதனைக்குட்படுத்தப்படும். ஹப்புத்தளை, பண்டாரவளை மற்றும் பதுளை பிரதேசங்களில் மருந்தகங்கள் பரிசோதிக்கப்பட்டன என பொதுச்சுகாதாரப் பரிசோதகர்களால் மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## இதற்கும் தேவை பொதுக்கட்டமைப்பு!

உயிர் கொல்லி ஹெரோய்ன் பாவனை தொடர்பில் உதயன் ஆசிரியர் தலையங்கத்தில் இரண்டு நாள்களுக்கு முன்னர் சுட்டிக்காட்டியிருந்தான். அந்த ஆபத்தின் வீரியத்தை உணர்த்தும் வகையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் மேலும் பல அதிர்ச்சிகரமான தகவல்கள் வெளியாகியுள்ளன. யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தால் மாத்திரம் உயிர் கொல்லி ஹெரோய்னுக்கு அடிமையானவர்கள் சராசரியாக நாள் ஒன்றுக்கு 4 தொடக்கம் 5 பேர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு அனுப்பப்படுகின்றார்கள், இவர்களில் அநேகர் பாடசாலை மாணவர்கள். எதிர்காலத் தலைமுறை எப்படிப்பட்ட ஆபத்தில் சிக்கியிருக்கின்றது என்பதற்கு இதைவிட வேறு உதாரணங்கள் தேவையில்லை.

சிறிலங்கா அரசு தமிழின அழிப்பை கனகச்சிதமாக காலாதி காலமாக மேற்கொண்டு வருகின்றது. அவர்களது ஒவ்வொரு இன அழிப்பின்போதும் இளம் சந்ததியே குறி வைக்கப்படுகின்றது. இறுதிப்போரில் இடம்பெற்ற இன அழிப்புக்கு நீதி கோரும் போராட்டத்தில் நாம் தீவிரமாக செயலாற்றி வருகின்றோம். ஆனால், கண்முன்னே நடந்து கொண்டிருக்கின்ற இன அழிப்புத் தொடர்பிலோ, அதைக் கட்டுப் படுத்துவது தொடர்பிலோ அக்கறை கொள்ளவில்லை. நடந்து முடிந்த இன அழிப்புக்கு நீதிகிட்டினாலும், அதன் ஊடாக ஒரு தேசம் மலர்ந்தாலும் அதை ஆண்டு அனுபவிப்பதற்கு நம்மினத்தின் அடுத்த தலைமுறை இருக்க வேண்டுமல்லவா? நம் அடுத்த தலைமுறையை ஆரோக்கியமானதாக தக்க வைக்கவேண்டிய தேவை எமக்கு உள்ளது.

உயிர்கொல்லி ஹெரோய்னுக்கு அடிமையானவர்களை புனர்வாழ்வு வழங்குவதன் ஊடாக மட்டும் இதனை ஒழித்துவிட முடியாது என்று யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் மருத்துவ நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். தனித்து புனர்வாழ்வு மாத்திரமல்லாது உயிர் கொல்லி ஹெரோய்ன் விநியோகத்தையும் முடக்கவேண்டும் என்றும் அவர்கள் ஆலோசனை கூறுகின்றனர். உயிர் கொல்லி ஹெரோய்ன் விநியோகத்தை முடக்குவதும் அதற்கு அடிமையானவர்களை அதிலிருந்து மீட்டெடுப்பதும் அத்தனை சுலபமான வேலையல்ல. அத்துடன் அதற்கும் எமக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்று ஒதுங்கியும் போக முடியாது. ஹெரோய்ன் விற்பனையில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள்தான் ஈடுபடுகின்றனர். அவர்களுக்கும் பொலிஸாருக்கும் தொடர்பு இருப்பதால் அது தொடர்பில் தகவல்களை வெளிப்படுத்த அஞ்சுவதாக ஊர்மக்கள் தெரிவிக்கின்றனர். ஹெரோய்ன் வியாபாரிகளின் மூலதனமே மக்களின் பயம்தான். அதை உடைத்தெறிவதன் ஊடாக மாத்திரமே அவர்களைக் கட்டுப்படுத்தமுடியும். மக்கள் நம்பிக்கையைப் பொலிஸார் பெற்றுக் கொள்வதன் ஊடாக இந்தப் பயத்தை இல்லாதொழிக்க முடியும்.


தற்போது கொழும்பிலிருந்து விசேட அணியொன்று களமிறக்கப்பட்டு போதைப் பொருள் வியாபாரிகள் என்று சந்தேகிக்கப்படுவோரை கைது செய்யும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருவதாக அறியமுடிகின்றது. இவ்வாறான செயற்பாடுகள் ஊடாக மக்களின் நம்பிக்கை தக்க வைக்கப்படுமாக இருந்தால், போதை வியாபாரிகள் தொடர்பில் பலதகவல்கள் கிடைக்கப்பெறலாம். உயிர் கொல்லி போதைப் பொருள் வியாபாரிகளை கைது செய்வதுடன் மாத்திரமல்லாது சமநேரத்தில் அவற்றுக்கு அடிமையானவர்களுக்கு புனர்வாழ்வு வழங்கப்படவேண்டும். கட்டாயத்தின் பெயரில் புனர்வாழ்வு பெறுபவர்கள் மீண்டும் உயிர் கொல்லி ஹெரோய்னுக்கு அடிமையாக வாய்ப்புள்ளது. எனவே அவர்கள் தொடர்பில் விசேட கவனம் எடுக்கவேண்டும்.

சமூகத்தில் பரவி – விரவியுள்ள இதனைக் கட்டுப்படுத்துவதற்கு ஓர் சமூகமாகக் கூட்டாகவே நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியுள்ளது. சமயத் தலைவர்கள் இதற்கு தலைமை தாங்கி ஒரு கூட்டுச் செயற்பாட்டை உருவாக்கி விரைந்து கட்டுப்படுத்தவேண்டும். தாமதிக்கும் ஒவ்வொரு நொடியும் நாம் பெரும் ஆபத்துக்குள் மூழ்கிக் கொண்டிருப்போம். நினைவேந்தல்களுக்கு மட்டுமல்ல, ஹெரோய்ன் போன்ற உயிர்கொல்லிகளிடம் இருந்து இளைய தலைமுறையைக் காக்கவும் ஒரு பொதுக்கட்டமைப்பு அவசியமே!

### நாளொரு நல்வார்த்தை

"உண்மையைப் பேசும்போது பழிப்புக்கு ஆளாவது பற்றி கவலை கொள்ளக்கூடாது"

- தந்தை பெரியார்




# திரிபோஷாவில் விஷம் கண்டறிவு மீளச் சேகரிக்கும் பணிகள் தீவிரம்

### சுகாதாரப் பரிசோதகர்கள் சங்க தலைவர் தெரிவிப்பு

**கொழும்பு, செப். 22**

**நாட்டில் சிறுகுழந்தைகள், கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு வழங்குவதற்காக சுகாதார மருத்துவ அதிகாரிகள் பணிமனைகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட திரிபோஷவை மீண்டும் சேகரிக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.**

இவ்வாறு மாதம்பையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாடளாவிய ரீதியில் சுகாதார மருத்துவ அதிகாரிகளின் அலுவலகங்களில் இருந்து சிசுக்கள் மற்றும் தாய்மார்களுக்கு விநியோகிக்கப்படும் திரிபோஷாவில் விஷம் கலந்திருந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

திரிபோஷாவில் அடங்கியிருக்க வேண்டிய அளவைவிட அஃபலரொக்சின் அளவு அதிகமாக இருப்பதன் காரணமாக இந்த விளைவு ஏற்பட்டுள்ளது.

குறிப்பாக, குழந்தைகளுக்கான திரிபோஷா உணவில் அதிகளவான நச்சுத்தன்மை வாய்ந்த மூலப் பொருள் அடங்கியிருந்தமை தெரியவந்ததை அடுத்தே விசாரணைகள் முடுக்கி விடப்பட்டன.

அத்துடன், இவ்வாறான நச்சுக்கலந்த திரிபோஷாவை விநியோகிக்க அனுமதி வழங்கப்பட்டவர்கள் மீது உடனடியாக விசாரணை நடத்தி நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் - என்றார். இதேவேளை குறித்த குற்றச்சாட்டை நிராகரிப்பதாக சுகாதார அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார். (ச-இ)

### பௌத்த வழிபாடுகளுக்கு இடையூறாம்

# ரவிகரன், சிவநேசனுக்கு எதிராக வழக்குத்தாக்கல்

முல்லைத்தீவு, செப். 22

குருந்தூர் மலையில், பௌத்த வழிபாடுகளுக்கு இடையூறு ஏற்படுத்தினர் என்ற குற்றச்சாட்டின் கீழ் வடமாகாண சபை முன்னாள் உறுப்பினர்களாக துரைராசா ரவிகரன், கந்தையா சிவநேசன், சமூகஆர்வலர் ஜூட் நிக்சன் ஆகியோருக்கு எதிராக முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

குருந்தூர் மலையில், கடந்த ஜூன் மாதம் 12 ஆம் திகதி நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட கட்டளைகளை மீறி, புத்தர் சிலை ஒன்றை நிர்மாணிப்பதற்கும், அங்கு புதிதாக நிர்மாணிக்கப்பட்ட விகாரையின் கலசத்துக்கு விசேட பூசைவழிபாடுளை மேற்கொள்வதற்குமான முயற்சி முன்னெடுக்கப்பட்டது.

இதற்கு எதிராக ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆர்ப்பாட்டத்தில் வடமாகாணசபை முன்னாள் உறுப்பினர்களான துரைராசா ரவிகரன், கந்தையா சிவநேசன், சமூக ஆர்வலர் ஜூட்நிக்சன் உள்ளிட்டவர்களும் பங்கேற்றிருந்தனர். இதையடுத்தே மேற்படி நபர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (ம-246)

### நாளை

**23.09.2022**

**வெள்ளிக்கிழமை**

**புரட்டாதி - 07**

சுபநேரம் : 06.02 - 07.32

ராகுகாலம்: 10.32 - 12.02

**பிரதோஷ விரதம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■ மு.வே.யோ.வாஞ்சிநாதன்

# திலீபனுடன் எட்டாம் நாள்...



## 22.09.1987

இன்று அதிகாலையிலே நிரஞ்சன் குழுவினர் கொட்டகைபோடும் வேலையை ஆரம்பித்துவிட்டனர். முதல்நாள் இலட்சக் கணக்கான மக்கள் வந்திருந்ததால் போடப்பட்டிருந்த கொட்டகைகள் எல்லாம் சனக்கூட்டத்தால் நிரம்பி வழிந்தன. உண்ணாவிரதம் ஆரம்பிக்கும்போது இத்தனை சனக்கூட்டம் வருமென யாருமே எதிர்பார்க்கவில்லை.

இலங்கையில் மட்டுமன்றி, இந்தியா மற்றும் பல வெளிநாடுகளில்கூட திலீபனின் தியாகப் பயணம் பற்றியே மக்கள் பெரும்பாலானோர் பேசிக்கொண்டிருப்பதாகப் பத்திரிகைகளில் போட்டிருந்தார்கள்.

அத்துடன் தமிழீழத்தின் பல பாகங்களிலும் பரவலாக மக்கள் அடையாள உண்ணாவிரதங்களை மேற்கொண்டு தம் எழுச்சியைக் காட்டிக்கொண்டிருந்தனர். மட்டக்களப்பு மாநகரில் 'மதன்' என்ற இளம் தளபதி ஒருவர், மக்களின் ஆதரவுடன் தன் போராட்டத்தை திலீபனின் வழியில் இன்னும் இரண்டு நாள்களில் ஆரம்பிக்கவிருப்பதாக என்னிடம் மாத்தையா கூறினார்.

இந்த மதனைத் தெரியாதவர்களே மட்டக்களப்பில் இல்லை. 1985ஆம் ஆண்டு நான் இந்தியாவில் இருந்தபோது மதன் தமிழீழத்துக்குச் சென்றார். பல போர்க்களங்களை தன் இளம் வயதில் சந்தித்தார். மட்டக்களப்பு மாவட்டத் தளபதி கருணாவுடன் சேர்ந்து திருகோணமலையிலுள்ள குச்சவெளிப் பொலிஸ் நிலையத்தை தகர்த்தவர்களுள் இந்த மதனும் ஒருவர். இந்த குச்சவெளிப் பொலிஸ் நிலையத் தாக்குதல்களில் முக்கியமாகப் பங்கெடுத்தவர்கள் வேறு யாருமல்ல, லெப்டினன்ட் கேர்ணல் சந்தோஷம், லெப்டினன்ட் கேர்ணல் குமரப்பா, லெப்டினன்ட் கேர்ணல் புலேந்திரன் ஆகியோர்தான்.

தமிழீழத்தின் முல்லைத்தீவு மாவட்டத்திலேயே திருச்செல்வம் என்ற போராளியும், அவருடன் சேர்ந்து பல பொதுமக்களும், உண்ணாவிரதப் போராட்டத்தை நாளை தொடங்க விருப்பதாகச் செய்திகள் வெளிவந்தன. தமிழீழம் எங்குமே அஹிம்சைப்போர் தீப்பிழம்பாக எரிந்துகொண்டிருக்கிறது. திலீபன் ஒரு மகத்தான மனிதன்தான். இல்லையென்றால் அவன் வழியிலேயே இத்தனை மக்கள் சக்தியா...!

▣ ▣ ▣ ▣ ▣

வல்வெட்டித்துறையிலே திலீபனுக்கு ஆதரவாக உண்ணாவிரதம் இருக்கும் ஐந்து தமிழர்களைத் தலைவர் பிரபாகரன் நேரில் சென்று சந்தித்தபோது எடுக்கப்பட்ட படத்தையும், திலீபனின் படத்தையும், பத்திரிகைகளில் அருகருகே பிரசுரித்திருந்தார்கள். ஈழமுரசு பத்திரிகையில் திலீபனுக்கு அடுத்த மேடையிலே சாகும்வரை (நீராகாரம் அருந்தாமல்) உண்ணாவிரதம் இருந்து கொண்டிருக்கும் திருமதி நல்லையா, செல்வி குகசாந்தினி, சிவா துரையப்பா ஆகியோரின் படங்களைப் போட்டிருந்தார்கள். மொத்தத்தில் எல்லாமே திலீபனின் அஹிம்சைப் போருக்கு வெற்றி முரசு கொட்டிக்கொண்டிருந்தன. பத்திரிகைகளில் வெளிவரும் செய்திகள் மட்டுமன்றி, ஒவ்வொரு ஊரிலிருந்தும் பல பொதுசன அமைப்புக்கள் அணியாக வந்து உண்ணாவிரதப் போராட்டத்தில் பங்குபற்றுவதோடு திலீபனுக்காக கவிதைவடிவில் ஆயிரக்கணக்கான துண்டுப்பிரசுரங்களையும் அச்சடித்து விநியோகித்து வந்தன.

இந்த எழுச்சியை, மக்களின் வெள்ளத்தை பார்ப்பதற்கு என்றே தினமும் யாழ்ப்பாண நகரத்தைச் சுற்றிச்சுற்றி வட்டமிட்டுக் கொண்டிருந்தன இந்திய சமாதானப் படையின் ஹெலிகொப்டர்கள்.

புலிகள் ஆயுதப் போராட்டத்தில் மட்டுமல்ல, அஹிம்சைப் போராட்டத்திலும் சாதனை படைக்கும் திறன் பெற்றவர்கள் என்ற பேருண்மை, உலகம் முழுவதும் பரவிக்கொண்டிருந்தது. திலீபனின் சாதனை உலக அரங்கிலே ஒரு சரித்திரமாகிக் கொண்டிருக்கிறது. உலகிலேயே முதன்முதலாக ஒரு சொட்டுநீர்கூட அருந்தாமல் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்து ஏழு நாள்களை வெற்றிகரமாக முடித்தவர் என்ற பெருமையுடன் அதோ கட்டிலில் துவண்டு வதங்கி, உறங்கிக்கொண்டிருக்கிறார் திலீபன். அவரது கண்கள் இரண்டிலும் குழிகள் விழுந்துவிட்டன. முகம் சருகைப்போல் காய்ந்து கிடக்கிறது. தலைமயிர்கள் குழம்பிக் கிடக்கின்றன. வயிறு ஒட்டிவிட்டது. நீரின்றி வாடிக்கிடக்கும் ஒரு கொடியைப் போல் வதங்கிக் கிடக்கின்றார். அவரால் விழிகளைத் திறக்க முடியவில்லை, பார்க்கமுடியவில்லை, பேச முடியவில்லை, சிரிக்க முடியவில்லை. தூங்க மட்டும் தான் முடிகிறது. இன்னும் எத்தனை நாள்களுக்குத் தான் இந்தக் கோல நிலவு தன் எழிலை இழந்து வாடி வதங்கப்போகிறது? முரளியின் பொறுப்பிலுள்ள மாணவர் அமைப்பைச் சார்ந்த மாணவ, மாணவிகள் சனக்கூட்டத்தைப் கட்டுப்படுத்திக் கொண்டிருக்கின்றனர். மகளிர் அமைப்பு உறுப்பினர்கள், சனங்களை வழிநடத்திக் கொண்டிருக்கின்றனர்.


▣ ▣ ▣ ▣ ▣



அதோ கட்டிலில் துவண்டு வதங்கி, உறங்கிக்கொண்டிருக்கிறார் திலீபன். அவரது கண்கள் இரண்டிலும் குழிகள் விழுந்துவிட்டன. முகம் சருகைப்போல் காய்ந்து கிடக்கிறது. தலைமயிர்கள் குழம்பிக் கிடக்கின்றன. வயிறு ஒட்டிவிட்டது. நீரின்றி வாடிக்கிடக்கும் ஒரு கொடியைப் போல் வதங்கிக் கிடக்கின்றார்.

பக்கத்து மேடையிலே நிகழ்ச்சிகள் ஆரம்பமாகிவிட்டன. பெரும்பாலானோர் அழுதழுது கவிதை படிக்கின்றார்கள். 'சிந்திய குருதியால் சிவந்த தமிழ் மண்ணில் சந்ததி ஒன்று சரித்திரம் படைக்க..... முந்திடும் என்பதால்... முளையிலே கிள்ளிட... சிந்தனை செய்தவர் சிறுநரிக் கூட்டமாய்... இந்தியப் படையெனும் பெயருடன் வந்தெம் சந்திரன் போன்ற திலீபனின் உயிரைப் பறித்திட எண்ணினால்... பாரிலே புரட்சி... வெடித்திடும்.. என்று வெறியுடன் அவர்களை... எச்சரிக்கின்றேன்..." மேடையிலே முழங்கிக் கொண்டிருந்த இந்த கவிதை என் மனத்திலே ஆழமாகப் பதிகிறது.

இன்று திலீபனின் உடல்நிலை மிகவும் மோசமாகிவிட்டது என்பதை அவரின் வைத்தியக் குறிப்புகள் எடுத்துக்காட்டுகின்றன. இரத்த அழுத்தம் 80/50. நாடித்துடிப்பு - 140. சுவாசம் 24.




## இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** குடும்பத்தினர் ஆதரவுடன் எண்ணம் நிறைவேறும். வருமானம் கூடும். எதிர்பார்த்த தகவல் வந்து சேரும். உங்கள் எண்ணம் ஈடேறும். பிள்ளைகளால் ஏற்பட்ட சங்கடம் விலகும்.

**இடபம்:** சகபணியாளர்களுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடு விலகும். அலுவலகத்தில் செல்வாக்கு அதிகரிக்கும். நீண்டநாளாக நிறைவேறாமல் இருந்த முயற்சி நிறைவேறும்.

**மிதுனம்:** செல்வாக்கு அதிகரிக்கும் நாள். நினைத்ததை நடத்தி முடிப்பீர்கள். மறைமுகத் தொல்லை கொடுத்தவர்கள் விலகுவர். திறமை வெளிப்படும். எதிர்பார்த்த ஒன்றை அடைவீர்கள்.

**கடகம்:** வியாபாரத்தில் ஏற்பட்ட தடைகளை விலக்குவீர்கள். எதிர்பார்த்தவற்றில் அனுகூலம் உண்டாகும். அறிவாற்றல் வெளிப்படும். லாபம் காண்பீர்கள்.

**சிம்மம்:** செலவு அதிகரித்தாலும் எதிர்பார்ப்பு நிறைவேறும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். புதிய முயற்சி இன்று வேண்டாம். வழக்கமான செயற்பாடுகளில் ஆதாயம் உண்டாகும்.

**கன்னி:** நினைத்ததை நிறைவேற்றி மகிழ்வீர்கள். புதிய வேலை வாய்ப் [illegible] வரவுக்காகச் செலவு செய்வீர்கள்.

**துலாம்:** நினைத்தது ஒன்று நடப்பது ஒன்றாகவும் இன்று மாறக்கூடும். செயலில் கவனம் தேவை. அனுசரித்துச் செல்வதால் ஆதாயம் அடையலாம். நண்பர்கள் ஆதரவு புரிவார்கள்.

**விருச்சிகம்:** உங்கள் பணிகளை பிறரிடம் ஒப்படைக்கவேண்டாம். அதனால் சங்கடங்கள் உண்டாகும். முயற்சி வெற்றியாகும் நாள். சொத்து வாங்கும் முயற்சி நிறைவேறும்.

**தனுசு:** விழிப்புடன் செயற்பட வேண்டிய நாள். உங்கள் செயல்களில் சில சங்கடங்களைச் சந்திப்பீர்கள். எதிர்பார்ப்பு நிறைவேற இழுபறியாகும். பணியிடத்தில் சில பிரச்சினை தோன்றும்.

**மகரம்:** முயற்சியில் சாதகமான நிலை உண்டாகும். புதிய வாகனம் வாங்குவீர்கள். வாக்குறுதியை நிறைவேற்றுவீர்கள். எண்ணங்களில் ஒன்று நிறைவேறும். ஆதாயம் ஏற்படும்.

**கும்பம்:** சுறுசுறுப்பாகச் செயற்பட்டு முயற்சியில் வெற்றி காண்பீர்கள். தடைகள் விலகும். வாழ்க்கைத் துணையின் ஆதரவுடன் உங்கள் எண்ணத்தைப் பூர்த்தி செய்வீர்கள்.

**மீனம்:** குடும்பத்தில் சலசலப்பு உண்டாகும் என்றாலும் அதைச் சரிசெய்வீர்கள். புதிய சொத்து வாங்கும் முயற்சி பலிதமாகும். இருப்பிடத்தில் மாற்றம் செய்வீர். பொன்பொருள் சேர்க்கை உண்டாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## திருமதி சபாபதி பரமேஸ்வரி



சீனிவாசகம் வீதி, கொட்டடியைப் பிறப்பிடமாகவும் வவுனியா கோவில் குளத்தை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சபாபதி பரமேஸ்வரி, இல.164, சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணத்தில் கடந்த (18.09.2022) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அருளம்பலம் - நாகம்மா தம்பதியரின் செல்வப் புதல்வியும், காலஞ்சென்ற சபாபதியின் அன்பு மனைவியும், பொன்னம்பலம் (ஜேர்மனி), பழனிதாஸ் (இலங்கை), வத்சலா (இலங்கை), சுசீலா (கனடா), கௌசலா (இலங்கை), புஷ்பராஜா (சுவிஸ்), அருள்தாஸ் (வவுனியா) சகுந்தலா (ஜேர்மனி), முருகதாஸ் (கனடா), குகதாஸ் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், திரவியநாயகி, தர்ஷிகா, ரஜனி, ஜெயந்தி, ஜென்சி, சிவலிங்கம், சண்முகராஜா, குமாரசிங்கம், விக்னேஸ்வரன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், தினேஸ், துஸ்யந்தி, துபிசன், துஸ்யந்தன், பிருந்தன், கீர்தணா, சிவதர்சினி, சிவதர்சன், சிவறஞ்சினி, சிவறாஜினி, சிவநிறஞ்சணா, துசாகரன், சர்வேசன், செந்தூரன், காலஞ்சென்ற நிரோசா, அனுஷா, ஸ்ரெலா, ஆர்த்தி, விதுஷ், ஆதவி, ராஜி, அர்ஜுன், அர்சனா, விதுஷா, விஜிதன், சௌமியா, திரிஷா, கீர்த்தி, ஜிவியானா, ஜிவியரன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான புண்ணிய மூர்த்தி, சிவமூர்த்தி, கதிர்காமமூர்த்தி, சச்சிதானந்தமூர்த்தி மற்றும் புவனேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், கனகேஸ்வரி, அருந்ததி, வாசுகி, சோதீஸ்வரி, பாலசுப்பிரமணியம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.09.2022) வியாழக்கிழமை இல.164, சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வில்லூன்றி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தோற்றம்**
**24.01.1939**

**மறைவு**
**18.09.2022**

**இல.164,**
**சிவன் பண்ணை வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**பிள்ளைகள்,**
**பேரப்பிள்ளைகள்**

# மரண அறிவித்தல்

## கலாபூஷணம் எலியாஸ் வரப்பிரகாசம்

(யாழ். ரத்னா, கலைஞான கற்பகம், கலைமணி, மரபுக் கூத்திசைக் காவலன், கலைக்குரிசில் ஈழத்து கலைமுரசு)

**அன்னை மடியில்**
**18.08.1930**

**ஆண்டவன் அடியில்**
**20.09.2022**



நீர்வேலி வடக்கைப் பிறப்பிடமாகவும் கொழும்புத்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட கலாபூஷணம் எலியாஸ் வரப்பிரகாசம் நேற்றுமுன்தினம் (20.09.2022) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான எலியாஸ் - குளோறியா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சாமிநாதன் - அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற இராசம்மாவின் அன்புக் கணவரும், யுஸ்ரீனா, யுனைற் கிங்சிலி (பிரான்ஸ்), காலஞ்சென்ற யுஸ்ரீபன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், பிரான்சிஸ், யசோதேவி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், சசிக்கா, செலஸ்ரீனா, சசிஸ்ரன், றொசான், நிஷான், ஸ்ரீபன், வினோஜன் (பிரான்ஸ்), ஜனுயன் (பிரான்ஸ்), காலஞ்சென்ற றொபேட் மற்றும் கொட்வின்ராஜ் (பிரான்ஸ்), ஜீவிதா, மரியலின்ரா, சுஜித்தா ஆகியோரின் அன்புப் பேரனும், சாதுஜன், டினுஸ்ரன், ஜஸ்வின், ஹரிஸ் ஆகியோரின் அன்புப் பூட்டனும், காலஞ்சென்றவர்களான குருசுமுத்து, ஞானப்பு, அருளானந்தம், நேசமணி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இரங்கல் திருப்பலி இன்று (22.09.2022) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு கொழும்புத்துறை செபமாலை அன்னை ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் அஞ்சலிக்காக நீர்வேலி ஞானப்பிரகாசர் கலையரங்கில் வைக்கப்பட்டு, அதனைத்தொடர்ந்து பூதவுடல் நல்லடக்கத்திற்காக நீர்வேலி புனித பரலோகமாதா சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல.39/1, சென்மேரிஸ் முதலாம் ஒழுங்கை,**
**கொழும்புத்துறை.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**077 106 7805**

(cs 46673) (2.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதவி வெற்றிடம்

## தேசிய உப்பு நிறுவனமானது

**(National salt Ltd)** கைத்தொழில் அமைச்சின் அதிகாரத்தின் கீழ் செயற்படும் அரசுக்கு சொந்தமான கம்பனியாகும். பின்வரும் வெற்றிடங்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கான பதவி வெற்றிடங்கள் ஒப்பந்த அடிப்படையில் முதலில் ஆறு மாத காலப்பகுதிக்கு பின்னர் தேவைக்கேற்ப நீடிக்கப்படும்.

* **வயதெல்லை : 22 - 45 இற்குள் இருத்தல் வேண்டும்**
* UGC / TVEC ஆல் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழை கொண்டி ருக்க வேண்டும்.
* EPF மற்றும் ETF வழங்கப்படும்

மேற் கூறப்பட்ட தகைமைகளைக் கொண்டிருக்கும் விண்ணப்பதாரி தங்களது சுய விபரக்கோவையை **எதிர்வரும் (28.09.2022) பிற்பகல் 3.00 மணிக்கு** முன்னர் கிடைக்குமாறு **தலைவர், தேசிய உப்பு நிறுவனம், 561 /3, எல்விடிகல மாவத்தை, கொழும்பு - 5 எனும் முகவரிக்கு** அனுப்புவதுடன் **கடித உறையின் இடது மூலையில் பதவி நிலையினைக் குறிப்பிடவும்.**

• **பதவி : தொழில்நுட்ப உத்தியோகத்தர் MA 2 - I**

* **திணைக்களம் : சிவில் டெக்னிக்**
* **மாதச் சம்பளம் : ரூ. 43,110**
* **பணியிடம் : ஆனையிறவு உப்பளம்**

• **தேவையான தகைமை:**

* NVQ level- 05 or அதற்கு சமனான Diploma
* 3 வருட அனுபவம்

• **பதவி : முகாமைத்துவ உதவியாளர் MA 1 –I**

* **திணைக்களம் :** Finance Divison
* **மாதச் சம்பளம் : ரூ. 40,710**
* **பணியிடம் : ஆனையிறவு உப்பளம்**

• **தேவையான தகைமை:**
* A/L 3 Pass
* 1 வருட தொழில் அனுவம்
* Professional qualification

**தலைவர்,**
**தேசிய உப்பு நிறுவனம்**

# கண்ணீர் அஞ்சலி




எமது அலுவலகத்தில் கடமையாற்றும்
செ.மூதுந்தினி அவர்களின் அன்புத் தாய்

**இராஜேந்திரம் கமலாம்பிகை**

அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக இறைவனை வேண்டுகின்றோம்.

**ஊழியர் நலன்புரிச் சங்கம்**
**வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்.**

# மரண அறிவித்தல்



## கபிரியேல் எஸ்தாக்கி

**(பாக்கியையா பீற்றர்)**

மண்ணில் 20.09.1950 | விண்ணில் 21.09.2022

யாழ்ப்பாணம் பாஷையூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கபிரியேல் எஸ்தாக்கி (பாக்கியையா பீற்றர்) நேற்று (21.09.2022) இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பெஞ்சமீன் பாக்கியையா, அருளம்மா (ரெத்தினக்கிளி) ஆகியோரின் அன்பு மகனும், தார்சீலம்மா (சந்திரா) வின் அன்புக் கணவரும், பவிலா, லோயலா (கொலன்ட்) சுசிலா (கொலன்ட்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், ரொனி கபிரியேல் (முகாமையாளர் - ஜனசக்தி ஆயுள் காப்புறுதி), சந்தனு (சிரேஸ்ட முகாமையாளர், இலங்கை வங்கி ஸ்ரான்லி வீதிக் கிளை), சுதந்திரா (கல்வி அமைச்சு - வடமாகாணம்), அதிஸ்ரா மற்றும் காலஞ் சென்ற டெலோறின், அதிஸ்ரா ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், கியூறி, ரிறோன் (உள்ளக கணக்காய்வு, மாவட்டச் செயலகம், கிளிநொச்சி), கட்சலா (பிரதேச அபிவிருத்தி வங்கி, கிளிநொச்சி), திபேரியஸ் (மென்பொருள் - பொறியியலாளர்) ஆகியோரின் மாமனாரும், பிறித்தீஸ், ஆர்வின், அன்றீசன், ஜெஸ்வின், றபேல் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிச்சடங்கானது இன்று (22.09.2022) வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு பின்னர் புனித கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலையில் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**076 077 6077**
**077 673 8721**

(CS 20883) (3/6)

**தகவல்:**
**குடும்பத்தினர்**

# மரண அறிவித்தல்



தோற்றம் 1954 . 08 . 25

மறைவு 2022 . 09 . 21

## திருமதி இராஜேஸ்வரி நித்தியானந்தன்

34, புதுவீதி, அத்தியடியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராஜேஸ்வரி நித்தியானந்தன் 21.09.2022 புதன்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி இராஜேந்திரம் தங்கம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ் சென்ற திரு.திருமதி சுப்பிரமணியம் சிவபாக்கியம் தம்பதியரின் பாசமிகு மருமகளும் காலஞ்சென்ற சுப்பிரமணியம் நித்தியானந்தனின் அன்பு மனைவியும் கௌசல்யா, திவ்வியா ஆகியோரின் அன்புத் தாயாரும் அருட்செல்வன் (வர்த்தகர்), துஜியந்தன் (ஆசிரியர் - யா/ புத்தகலட்டி ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயம்) ஆகியோரின் மாமியாரும் வசந்தகுமாரியின் ( ஓய்வுபெற்ற பல் வைத்தியர்) சகோதரியும் சயிந்தவி, அத்விகா, திவிட்ஷிகா, திவிட்ஷனா ஆகியோரின் அம்மம்மாவும் இலட்சுமணக் குமார் (ஓய்வுபெற்ற ஆசிரியர்), பரமானந்தன், விஜயராணி, சிவானந்தன், கிருபானந்தன் (ஓய்வு பெற்ற ஆசிரியர்), விவேகானந்தன் (ஓய்வுபெற்ற அதிபர்), கருணாகரன், காலஞ்சென்றவர்களான சச்சிதானந்தன், புஸ்பராணி, செல்வராணி, ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.09.2022) வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**இல.34, அத்தியடி புதுவீதி,**
**யாழ்ப்பாணம்**

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**தொ.பே: 0772299547**
**0778117984**

(CS/20886)

# மரண அறிவித்தல்



## சங்கரன் கந்தையா

யாழ்.- கரவெட்டியை பிறப்பிடமாகவும் தையிட்டியை வசிப்பிடமாகவும் சண்டிலிப்பாய் வடக்கை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட சங்கரன் கந்தையா அவர்கள் 21.09.2022 புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சங்கரன், இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற தம்பன் பொன்னி தம்பதியரின் அன்பு மருமகனும் அழகம்மா அவர்களின் அன்புக்கணவரும் காலஞ்சென்றவர்களான செல்லம்மா, சின்னக்கிளி, தவமணிதேவி, வள்ளிப்பிள்ளை மற்றும் சிவபாதம், புத்திசிகாமணி, தருமன் (ஜேர்மனி), இரத்தினேஸ்வரி (பிரான்ஸ்), நவரத்தினம் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்றவர்களான இராசரத்தினம், யோகராசா மற்றும் கணேஸ், சின்னராசா (கொழும்பு), இந்திரா, சாந்தி ஆகியோரின் அன்பு மைத்துனரும் கருணாதேவி (பிரான்ஸ்), வேணிகாசினா (பிரான்ஸ்), கனிஸ்ரா (இலங்கை), கனிதா (UK), கவிதாஸ் (UK), கஜேந்திரா (ஜேர்மனி), கஜாளினி (சுவிஸ்), கஜிதா (பிரான்ஸ்), கசீவன் (இலங்கை) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஜெயானந்தராசா, மார்க்கஸ், ரமேஸ், ரோகினி, சிந்துஜா, பிரிந்தாபன், கஜகரன் ஆகியோரின் அன்பு மாமனாரும் யதுரா, ஜெனக்சன், சர்வின், அபிஷா, அனோஸ், அபிஜித், ருக்ஷன், ருஷான், காருணிகா, காவ்யா, அத்விகா, ஆருஷ், அனிகா, ஆருக்ஷியா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.09.2022) வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் சண்டிலிப்பாய் வடக்கு, சண்டிலிப்பாயிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் கொட்டுப்பனை இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தொடர்புகளுக்கு:**
**மகன் கசீவன்**
**0778725159**

(CS/20885)

**தகவல்: குடும்பத்தினர்**
**சண்டிலிப்பாய் வடக்கு,**
**சண்டிலிப்பாய்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீரிழிவுக்குப் புதிய மருந்து; றுகுணு பல்கலை தயாரிப்பு

**யாழ்ப்பாணம், செப். 22**

**குருதியில் சீனியின் அளவைக் குறைக்கும் புதிய மருந்தை றுகுணு பல்கலைக்கழகத்தின் மருத்துவபீடத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் குழுவொன்று கண்டுபிடித்துள்ளது.**

இதுதொடர்பில் ஆய்வுக் குழுவின் தலைவரும், மருத்துவ பீடத்தின் உயிரியல் துறை பேராசிரியருமான அனோஜா அத்தநாயக்க ஊடகங்களுக்கு தெரிவித்ததாவது:-

கொவ்வை இலையில் உள்ள இரசாயனப் பதார்த்தங்கள் தொடர்பில் நீண்டகால ஆய்வுக்கு பின்னரே இந்த மருந்து தயாரிக்கப்பட்டுள்ளது.

ஆய்வின் முடிவுகளின்படி கொவ்வை இலைகளில் உள்ள இரசாயனப் பதார்த்தங்கள் இரத்தத்தில் உள்ள சீனியை குறைக்கவல்லவை என ஆய்வாளர்கள் உறுதி செய்துள்ளனர்.

அதனைப் பயன்படுத்தியே மருந்து வில்லைகள் தயாரிக்கப்பட்டுள்ளன. இந்த மருந்து மருத்துவ ஆராய்ச்சிக்கு அனுப்பப்பட்டது.

இந்தப் பரிசோதனை 158 நீரிழிவு நோயாளிகளைப் பயன்படுத்தி நடத்தப்பட்டது. இந்த மருந்து அவர்களின் குருதியில் சீனியின் அளவைக் குறைத்து வெற்றியளித்துள்ளது.

எனினும், கொவ்வைச் செடியை வெறுமனே சாப்பிடுதல் ஆகாது - என்று அவர் மேலும் தெரிவித்தார்.

(ச-இ)

## கண்ணீர் அஞ்சலி



எமது அலுவலகத்தில் கடமையாற்றும்
திருமதி ந.கோசலா அவர்களின் அன்புத் தந்தை

**செல்லையா அருமைத்துரை**

அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு
எமது அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின்
ஆன்ம இளைப்பாற்றிக்காக இறைவனை
வேண்டுகின்றோம்.

ஊழியர் நலன்புரிச் சங்கம்
வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்.

## கடன் மறுசீரமைப்புக்கான ஒப்புதல் கிடைத்ததும் நிதி



கொழும்பு, செப். 22

இலங்கைக்கு கடன் வழங்கியவர்கள், கடன் மறுசீரமைப்புக்கான ஒப்புதலையும் விருப்பத்தையும் வெளிப்படுத்தியவுடன், சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கான முதலாவது நிதித்தொகையை வழங்கும் என்று இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

நாளை வெள்ளிக்கிழமை முதல் இலங்கை, கடன் வழங்குனர்களுடன்பேச்சுக்களை ஆரம்பிக்கிறது. அன்றுமுதல் கடன் மறுசீரமைப்புக்கான இணக்கப்பாட்டையும் ஒப்புதலையும் இலங்கை, கடன் வழங்கு நர்களிடம் இருந்து பெற ஆரம்பிக்கும். கடன் மறுசீரமைப்பு தொடர்பாக கடன் வழங்குநர்களின் ஒப்புதல் முக்கியமான விடயமாக கருதப்படுகிறது. இது சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து இலங்கை உதவியைப் பெற்றுக் கொள்வதற்கான முன்னுரிமையளிக்கப்பட்ட விடயமாக உள்ளது - என்றும் மத்திய வங்கியின் ஆளுநர் மேலும் தெரிவித்துள்ளார். (ம)

## மரண அறிவித்தல்



தோற்றம்: 02 . 10 . 1939

மறைவு: 21 . 09 . 2022

### துரைராசா அன்னக்கிளி

ஆனைக்கோட்டையை பிறப்பிடமாகவும் வண்ணார்பண்ணையை வசிப்பிடமாகவும் கொண்ட துரைராசா அன்னக்கிளி நேற்று (21.09.2022) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு-தங்கம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கந்தையா தம்பதியரின் பாசமிகுமருமகளும், காலஞ்சென்றதுரைராசாவின் அன்பு மனைவியும் மனோரஞ்சினி, காலஞ்சென்ற ரஞ்சிதம் மற்றும் கௌரிநாயகி (ஓய்வுபெற்ற மருந்தாளர், சுகாதார பணிமனை, யாழ்ப்பாணம்), சரதாமணி, தவநேசன் (ஜேர்மனி), ஜெகதீஸ்வரி (ஆசிரியை இளையதம்பி மகாவித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தாயும் காலஞ்சென்றவர்களான இராசரத்தினம்,செல்லப்பிள்ளை,தங்கராசா மற்றும் இராசமணி ஆகியோரின் அன்புச்சகோதரியும் மகேந்திரன், காலஞ்சென்ற கிருஷ்ணசுந்தரம் மற்றும் ஸ்ரீஆனந்தன், சிவகுமார்(ஜேர்மனி), சுபமாலா(ஜேர்மனி),ஸ்ரீதரன், தீபா, சகுந்தலாதேவி(ஜேர்மனி), சற்குணா தேவி ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஹரிஷ், பிரணவன், பவனிகன், கௌதம், பைரவி, மதுஷன் (ஜேர்மனி), கோபிகா, வேணுகா, கயலட்சுமி ஆகியோரின் அன்புப்பாட்டியும் தியானகி, மற்றும் திசானனின் அன்புப் பூட்டியும், காலஞ்சென்ற சாந்தி (ஆனைக்கோட்டை) மற்றும் ஜெயா (சுவிஸ்), ரதி(லண்டன்), குமார், டில்லி (ஆனைக்கோட்டை) ஆகியோரின் அன்பு பெரியம்மாவும் ஜேர்மனில் வசிக்கும் ராசினி மற்றும் சந்திராவின் பெரியம்மாவும் ஆனைக்கோட்டையைச்சேர்ந்த சாந்தினியின் பேரமக்கள், குமாரின் பேரமக்கள், மற்றும் டில்லியின் பேரமக் களும் ஜெயா (சுவிஸ்) பேரமக்களும் மற்றும் லண்டன் பேரமக்களும் (ரதி) ஜேர்மனியில் வசிக்கும் சந்திராவின் பேரமக்கள் மற்றும் சகுந்தலாவின் பேர மக்கள் தவம், தேவா பிள்ளைகள் , பேரப்பிள்ளைகள் , நடேசர் பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், சண்முகராசா பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்,ராணிமச்சாள் பேரப்பிள்ளைகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.09.2022) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பி.ப. 3.00மணியளவில் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நாவலடி, வண்ணார்பண்ணை
யாழ்ப்பாணம்.

தகவல்: குடும்பத்தினர்
077-6249436

## மரண அறிவித்தல்



மலர்வு: 03 . 04 . 1944

உதிர்வு: 21 . 09 . 2022

### அமரர் திருமதி இராசரத்தினம் சின்னத்தங்கம்

ஆதிமயிலிட்டியைப் பிறப்பிடமாகவும் தெல்லிப்பழையை வசிப்பிடமாகவும் கொண்ட இராசரத்தினம் சின்னத்தங்கம் 21.09.2022 இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா பொன்னுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை செல்லாட்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற இராசரத்தினத்தின் அன்பு மனைவியும் பவானி, ஜெயபவான் (சுவிஸ்), தயாழினி (சுவிஸ்), றஞ்சினி (சுவிஸ்), சுகந்தினி (ஜேர்மன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆனந்தராசா, சசிச்செல்வி (சுவிஸ்), ஞானவேல் (சுவிஸ்), கேதீஸ்வரன் (சுவிஸ்), பரமேஸ்வரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் பரமேஸ்வரி மற்றும் முருகையா, மல்லிகாதேவி, கந்தசாமி (லண்டன்), புவனேஸ்வரி, அண்ணாத்துரை (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
குடும்பத்தினர்

CS/20893

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்தாம் ஆண்டு நினைவலைகள்



அமரர் **பொன்னம்பலம் நாகரத்தினம் JP**

அகில இலங்கை சமாதான நீதவான்,
ஓய்வுநிலை பொறியியலாளர், இ.போ.ச.
சின்னாலடி, காரைநகர்.

ஏணியாக நின்று எம்மை ஏற்றிவிட்ட
எங்கள் அன்பு பெரியப்பாவே!
வாழ்வுக்கு இலக்கணமாய், எடுத்துக்காட்டாய்
வாழ்ந்து காட்டிய உத்தமரே!
இவ்வுலகை விட்டு நீங்கள் சென்றாலும்
நிலையாக வாழ்ந்திடுவீர் எம்மனதில் -
- என்றென்றும்.
உம் பாதம் பணிந்து நிற்போம்.
வாழ்த்திடுவீர் எமை என்றும் பாரினில் நாம்
- உயர்ந்திடவே!

மலர்வு 02-04-1944 உதிர்வு 22-09-2017 (CS 20871) (3/6)

**அன்புடன் பெறாமக்கள்**
**காரைநகர்.**

# ஐந்தாம் ஆண்டு நினைவலைகள்



அமரர் **பொன்னம்பலம் நாகரத்தினம் JP**

அகில இலங்கை சமாதான நீதவான்,
ஓய்வுநிலை பொறியியலாளர், இ.போ.ச.
சின்னாலடி, காரைநகர்.

*சமூக சேவை மாமணியாய் புகழ்பூத்த நண்பனே!*
*உனைப் பிரிந்து வாடுகின்றேன்! வருந்துகின்றேன்!*
*ஆறவில்லை என் துயரம், தேறவில்லை என் மனது*
*உமைத்தேடி அலைகின்றேன் உமைப்பிரிந்த நண்பன்*
*யான் எனைப் பிரிந்து விண்ணுலகம் விரைவாகச்*
*- சென்றதென்ன?*
*நித்தம் உம் நினைவோடு வாழுகின்றேன்*
*- இவ்வுலகில்....*

(CS 20872) (3/6)

மண்ணுலகில் 02-04-1944 விண்ணுலகில் 22-09-2017

**திரு.எஸ். சற்குணராஜா,**
**ஓய்வுநிலை முகாமையாளர்**
**தேசிய சேமிப்பு வங்கி (NSB)**

# ஐந்தாம் ஆண்டு நீங்காத நினைவுகளுடன்

தோற்றம் 02 - 04 - 1944



மறைவு 22 - 09 - 2017

அமரர் **பொன்னம்பலம் நாகரத்தினம் JP**

அகில இலங்கை சமாதான நீதவான், ஓய்வு நிலைபொறியியலாளர், இ.போ.ச.
சின்னாலடி, காரைநகர்.

ஆண்டுகள் பல ஓடி மறைந்தாலும் உங்கள் ஞாபகங்கள்
என்றென்றும் அழியாது நிலைத்து நிற்கும் என்மனதில்
கவிதைகளால் எனை மயக்கி. காதலித்துக் கரம் பிடித்து
கணமேனும் பிரியாது. ஒருயிராய் வாழ்ந்து வந்தீர்!
உமைப் பிரிந்த நாள் முதலாய். யாருமற்ற அநாதையாய்
கலங்கித் தவிக்கின்றேன். கண்ணீருடன் வாழ்கின்றேன்!
என்னைத் தவிக்கவிட்டுச் சென்றதேனோ?
என் நிழல்போல் இருந்தவரே!
சொந்தங்கள் எல்லாம் தூரத்தே சென்றாலும்
உங்கள் நினைவுடனே இவ்வுலகில் வாழ்கின்றேன்!
மறந்துபோன மாந்தர்கள் உள்ள இவ்வுலகில்
மறக்கப்படாத நினைவுகளாய்
உம் கவிதைகள் என்றென்றும் என்னுடன்
எண்ணி எண்ணி நான்
நித்தமும் பெருமிதம் கொள்கின்றேன்.

**சின்னாலடி,**
**காரைநகர்**

**என்றும் உங்கள் நீங்காத நினைவுகளுடன் வாழும்,**
(CS 20868) (3/6) **உங்கள் ஆருயிர் மனைவி**

# ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 02 - 04 - 1944



மறைவு 22 - 09 - 2017

அமரர் **பொன்னம்பலம் நாகரத்தினம் JP**

அகில இலங்கை சமாதான நீதவான், ஓய்வுநிலை பொறியியலாளர், இ.போ.ச.
சின்னாலடி, காரைநகர்.

எம் உயர்வுக்காய் உழைத்திட்ட எங்கள் நல் ஆசானே!
உமைத்தேடி அலைகின்றோம் உம் பிரிய மாணவர் நாம்
எம் உயர்வுக்காய் அயராது. இரவு பகல் பாடுபட்டீர்!
புலமைப்பரிசில் பரீட்சையில் நாம் சித்திபெற
ஓயாது உழைத்த பெருமைமிகு உத்தமரே!
"உயர்குரு பிரதீபா விருது" பெற்ற அதிபராம்
உம் அன்பு மனையாளுடன் நிறைவாகச் சேவை செய்தீர்!
சமாதான நீதவானாய். சோதிட வல்லுனராய்.
சிறந்த பேச்சாளராய். பல்துறை வித்தகனாய்
சாதனைகள் பல புரிந்த சகலகலாவல்லவனே!
கலாநிதி தியாகராஜாவின் உறவினராய். அரசியல் நண்பனாய்
கலாநிதி கென்னடியின் உறவினராய். ஆருயிர்த் தோழனாய்
கற்றோரை மதிக்கும் உயர்ந்த உள்ளம் கொண்டவரே!
அறிஞர்களுடன் சேர்ந்து ஈசனடி சென்றீரே!
அவர்கள் பாதையில் பயணித்து நின்றீரே!
கல்விக்காருண்யனே! அறிவு நிறை மாமனிதா!
உங்கள் சேவையைப் பின்பற்றி நாமும் தொடர்வதற்காய்
என்றென்றும் எங்களை வாழ்த்திடுவீர் அறிஞனே!

**காரைநகர்.**

(CS 20851) (3/6)

**உங்கள் பிரிவால் துயருறும்**
**உங்கள் பழைய மாணவர்கள்**


## விசேட தேவையுடையோரின் விளையாட்டு நிறைவு விழா

மட்டக்களப்பு, செப். 22

கிழக்கு மாகாண விசேடதேவையுடையோரின் விளையாட்டு விழாவின் நிறைவுநாள் நிகழ்வுகள், நாளைமறுதினம் சனிக்கிழமையும் 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் பிற்பகல் 2 மணி முதல் மட்டக்களப்பு வெபர் மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இதன் ஒரு பகுதியான சத்தப்பந்து கிரிக்கெட் நிகழ்வு, நாளை வெள்ளிக்கிழமை காலை 8.30 மணி முதல் மட்டக்களப்பு கல்லடி சிவானந்தா விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது. இதில் மட்டக்களப்பு உதயம் விழிப்புலனற்றோர் சங்கத்தை எதிர்த்து யாழ்ப்பாணம் விழிப்புலனற்றோர் சங்கம் மோதவுள்ளது என்று விழா ஏற்பாட்டுக்குழுவான மட்டக்களப்பு மாற்றுத்திறனாளிகள் சங்கம் தெரிவித்துள்ளது. (ஒ-14)

*18-25 வயதுக்குட்பட்ட*

## எச்.ஐ.வி. தொற்றாளர் நாட்டில் அதிகரிப்பு!

கொழும்பு, செப். 22

18 முதல் 25 வயதுக்குட்பட்ட எச்.ஐ.வி. நோயாளிகளின் எண்ணிக்கை நாட்டில் அதிகரித்துள்ளது என தேசிய எச்.ஐ.வி. தடுப்பு திட்டமிடல் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

கடந்த ஓகஸ்ட் மாதத்தில் பாதிக்கப்பட்ட 50 பேரில் 18 பேர் வரையில் 18 முதல் 25 வயதுக்குட்பட்டவர்கள் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் எச்.ஐ.வி.யால் பாதிக்கப்பட்ட சுமார் 2 ஆயிரத்து 300 பேர் தடுப்பூசியை எடுத்துக் கொள்கின்றனர். மேலும் பாதிக்கப்பட்டவர்கள் என இனங்காணப்படாத சுமார் ஆயிரத்து 400 பேர் சமூகத்திலுள்ளனர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காரைநகர் பிரதேச பண்பாட்டு விழா

காரைநகர் பிரதேச கலாசாரப் பேரவையும் காரைநகர் பிரதேசசெயலகமும் இணைந்து நடத்தும் பிரதேச பண்பாட்டு விழா இன்று வியாழக்கிமை முற்பகல் 9.30 மணிக்கு காரைநகர் இந்துக் கல்லூரி நடராசா ஞாபகார்த்த மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

காரைநகர் பிரதேசசெயலர் மரியதாசன் ஜெகூ தலைமையில் நடைபெறவுள்ள விழாவில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்டச்செயலர் க.மகேசனும் சிறப்பு விருந்தினராக வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்ளப் பிரதிப் பணிப்பாளர் ராஜமல்லிகை சிவசுந்தர சர்மாவும் கலந்துகொள்ளவுள்ளனர். (ஒ-14,250)

### காணிகளைக்...

தண்ணிமுறிப்பு மற்றும் குமுழமுனையைச் சேர்ந்த மக்களால் நடத்தப்பட்ட இந்தக் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், சமூக அமைப்புக்களைச் சேர்ந்தோர் எனப் பலர் கலந்துகொண்டனர்.

குருந்தூர்மலையைச் சூழவுள்ள தமிழ் மக்களின் பூர்வீகக் காணிகளான 632 ஏக்கர் காணிகளை தொல்லியல் திணைக்களம் கையகப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளது. அதேநேரம் முல்லைத்தீவு நீதிமன்றத்தின் கட்டளையை மீறி குருந்தூர் மலையில் தமிழ் மக்களின் பூர்வீக வழிபாட்டிடத்தில் பௌத்த விகாரை ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது. இவற்றுக்கு எதிர்ப்புத் தெரிவித்தே இந்த ஆர்ப்பாட்டம் மக்களால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

குருந்தூர் மலையடிவாரத்தில் ஒன்றுகூடிய மக்கள் பதாகைகளைத் தாங்கியவாறும், கோஷங்களை எழுப்பியும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். குருந்தூர் மலையில் மேற்குப் பகுதிக்குச் சென்ற மக்கள் அங்கும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், வடமாகாண சபை முன்னாள் உறுப்பினர்களான துரைராசா ரவிகரன், கந்தையா சிவநேசன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் க.சுகாஷ், கரைதுறைப்பற்று பிரதேசசபை உறுப்பினர் சி.லோகேஸ்வரன், புதுக்குடியிருப்பு பிரதேசசபை உறுப்பினர் ஜோன்சன், கரைச்சி பிரதேசசபை உறுப்பினர் ஜீவன், யாழ்ப்பாணம் பல்கலைக்கழக ஒன்றியத்தினர் போன்றவர்களும் மக்கள் ஏற்பாடு செய்த இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டிருந்தனர்.

மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட சந்தர்ப்பத்தில் அங்கு ஆயுதம் தாங்கிய பொலிஸார் பெரும் எண்ணிக்கையில் குவிக்கப்பட்டிருந்தனர். ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களை அச்சுறுத்தும் வகையில் நடந்து கொண்ட பொலிஸார், ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களை ஒளிப்படமும் எடுத்தனர். (எ-246)

### பிள்ளைகளை...

பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் உயிர்கொல்லி ஹெரோய்னுக்கு அடிமையான இளைஞனால் அவரது சகோதரி வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டதாகக் குற்றஞ்சுமத்தப்பட்டுள்ளது. இதன் காரணமாக அந்தப் பெண் தவறான முடிவு எடுத்து உயிரிழந்திருந்தார்.

இதன் பின்னர் உயிர் கொல்லி ஹெரோய்னுக்கு அடிமையான தமது பிள்ளைகளை, புனர்வாழ்வுக்காக பெற்றோர் மருத்துவமனைகளில் ஒப்படைக்கும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. நீதிமன்றங்கள் ஊடாகவும் புனர்வாழ்வுக்கு அதிகளவானோர் அனுப்பப்பட்டு வருகின்றனர். (அ-ஒ-5)

### ஹெரோய்ன் விற்பனை...

போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்டவரிடம் இருந்து 4 கிராம் ஹெரோய்ன் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். கொழும்பில் இருந்து வந்த போதைப்பொருள் தடுப்பு விசேட பொலிஸ் பிரிவு இந்தக் கைது நடவடிக்கையை முன்னெடுத்திருந்தது. சந்தேகநபரைக் கைது செய்யச் சென்றபோது, வீட்டிலிருந்தவர்கள் பொலிஸாரை கடமைகளைச் செய்யவிடாது இடையயூறு செய்து தாக்க முயன்றதுடன், தடயங்களை அழிக்கவும் முயன்றனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர் தற்போது யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார் என்றும், யாழ்ப்பாணம் பொலிஸார் மேலதிக நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (அ-எ-5)

### மூதாட்டியின்...

இவர் வீட்டில் தனித்தே வாழ்ந்து வந்தார் என்றும், அவர் தவறான முடிவெடுத்து கிணற்றில் வீழ்ந்திருக்கலாம் என்றும் ஆரம்ப விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிணற்றில் இருந்து மீட்கப்பட்ட உடல் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை வட்டுக்கோட்டைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (அ-எ-27)

### பணவீக்கம்...

தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய நுகர்வோர் விலைக் குறியீட்டில் வருடாந்த புள்ளி மாற்றத்தால் அளவிடப்படும் முதன்மைப் பணவீக்கம் ஓகஸ்ட் மாதத்தில் 66.7 வீதமாகப் பதிவாகியுள்ளது.

உணவுப் பணவீக்க விகிதம் 84.6 சதவீதமாக அதிகரித்துள்ளது என்று திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (அ-எ-இ)

### கொரோனா...

உயிரிழந்தவர்களில் 60 வயதுக்கு மேற்பட்ட இரு பெண்களும், 39 வயதுக்கும் 59 வயதுக்கும் இடைப்பட்ட ஆண் ஒருவரும் அடங்குகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, நாட்டில் மேலும் 14 பேருக்கு நேற்றுக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் தெரிவித்தார். (அ-எ-இ)

### பாதுகாப்பு...

பின் நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று அரச வருமானத்தை அதிகரிப்பது தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பஞ்ச ஈஸ்வரங்கள் என்று அழைக்கப்படும் ஆலயங்களில் ஒன்றான கோணேஸ்வரத்தில் சுற்றுலாத்தலத்தை உருவாக்கி மிகப் பெரிய பௌத்த விகாரை அமைக்கப்படவுள்ளது. இதற்காக ஆலயத்துக்குச் சொந்தமான 18 ஏக்கர் நிலத்தைக் கையகப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. திருக்கோணேஸ்வர ஆலயத்தின் புனிதத் தன்மையை இல்லாதொழிக்க எடுக்கப்படும் செயற்பாடுகளை அரசாங்கம் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

குருந்தூர்மலையிலும் ஆக்கிரமிப்புகள் நடக்கின்றன. நீதிமன்ற உத்தரவையும் மீறி கட்டட நிர்மாணங்கள் இடம்பெறுகின்றன. இவை தமிழ் மக்கள் மத்தியில் நல்ல எண்ணங்களை ஏற்படுத்தப் போவதில்லை.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க புலம்பெயர் தமிழர்கள் தொடர்பில் பேசிக் கொண்டிருக்கின்றார். புலம்பெயர் அமைப்புக்கள் சிலவற்றின் மீதான தடைகள் நீக்கப்பட்டுள்ளன. பல அமைப்புக்கள் மீதான தடைகள் இப்போதும் உள்ளன. கொள்கை ரீதியான விடயமாக இதை எடுத்துக்கொள்ள வேண்டும். இங்குள்ள தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும்.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் உரையாற்றிய இந்தியப் பிரதிநிதி, 'அரசியல் தீர்வு இன்றி இன இணக்கப்பாடு கிடையாது. இன இணக்கப்பாடு இல்லாவிட்டால் பொருளாதார வளர்ச்சி இருக்காது' என்று கூறியுள்ளார். இதைப் பெரும்பான்மையினர் புரிந்துகொள்ளவேண்டும். அந்தப்பிரச்சினைகளை தீர்ப்பதன் மூலமே அனைத்து இனத்தவர்களும் இணைந்து நாட்டை பொருளாதார ரீதியில் சுபீட்சத்தை நோக்கி கொண்டு செல்ல முடியும் - என்றார். (அ-எ-இ)

### ஹெரோய்ன் விற்ற...

போதைப்பொருளை விற்பனை செய்த குற்றச்சாட்டில் 11 வயதுச் சிறுமி ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

சிறுமியை போதைப் பொருள் விற்பனைக்கு 'ஊக்குவித்த குற்றச்சாட்டில், சிறுமியின் தாயைக் கைது செய்வதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சிறுமியின் தந்தை போதைப்பொருள் விற்பனை செய்த குற்றத்துக்காக சிறைத்தண்டனை அனுபவித்து வருகின்றார். தாயுடன் தங்கியுள்ள சிறுமி போதைப்பொருள் விற்பனைக்கு ஊக்குவிக்கப்பட்டுள்ளார் என்று கூறப்படுகின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (அ-எ-5)

### போதைக்கு...

வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் பொ.ரவிச்சந்திரன் தெரிவித்தார்.

நேற்றைய "உதயன்" பத்திரிகையில் "போதைப் பொருளுக்கு எதிரான ஆசிரியைக்கு உடன் இடமாற்றம்" என்ற செய்தி தொடர்பில் அனுப்பியுள்ள விளக்கத்திலேயே இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற போதைப்பொருள் பாவனைக்கு எதிரான கருத்தரங்கில் தெரிவிக்கப்பட்ட விடயத்தை "உதயன்" செய்தியாக வெளியிட்டிருந்தது.

வலிகாமம் கல்விப் பகுதியிலுள்ள பாடசாலை ஒன்றில் போதைப் பொருள் பாவனைக்கு அடிமையான மாணவர் ஒருவர் ஆசிரியையால் இனங்காணப்பட்டு, அந்த மாணவர் சாகவச்சேரியில் உள்ள மறுவாழ்வு நிலையைத்துக்கு ஆசிரியையால் அனுப்பப்பட்டார் என்றும், பாடசாலையின் பெயருக்கு களங்கம் ஏற்படுத்த முயன்ற குற்றச்சாட்டில் ஆசிரியை இடமாற்றம் செய்யப்பட்டார் என்றும் கருத்தரங்கில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பில் "உதயனுக்கு" வலயக் கல்விப் பணிப்பாளர் அனுப்பியுள்ள விளக்கத்தில், எமது வலயத்துக்குட்பட்ட எந்தப் பாடசாலையிலும் போதைப்பொருள் பாவனையுடன் தொடர்புடைய மாணவரை இனங்கண்டமைக்காக ஆசிரியர் எவரும் இடமாற்றத்துக்கு உட்படவில்லை என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன் - என்றுள்ளது. (அ-எ-இ)

### ரவிகரன்...

மைக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்ட நிலையில், அந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரன் மற்றும், கரைதுறைப்பற்று பல நோக்கு கூட்டுறவுச்சங்க முன்னாள் தலைவரும், சமூகசெயற்பாட்டாளருமான இரத்தினராசா மயூரன் ஆகியோர் முல்லைத்தீவுப் பொலிஸாரால் நேற்று இரவு கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட து.ரவிகரன் மற்றும் இ.மயூரன் ஆகியோர் விசாரணைக்காகப் பொலிஸ் நிலையம் வர வேண்டுமென்று முல்லைத்தீவுப் பொலிஸாரால் அறிவித்தல் வழங்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில், விசாரணைக்குச் சென்ற இருவரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (அ-எ-246)

### வர்த்தமானியில்...

மாகாண பிரதம செயலாளருக்குக் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

இது தொடர்பில் அவர் எழுதியுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இந்த விடயம் தொடர்பாக பிரதமர் மற்றும் பொது நிர்வாக உள்நாட்டலுவர்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரால் வெளியிடப்பட்ட 06/09/2022ஆம் திகதி 2296/05 ஆம் இலக்க வர்த்தமானி பத்திரிக்கைக்கு தங்கள் அவதானம் கோரப்படுகின்றது.

இந்த வர்த்தமானியில் "வவுனியா நகர சபை, வவுனியா மாநகர சபை" யாக ஸ்தாபிப்பது என தமிழில் இருக்கும் நிலையில், ஆங்கிலத்தில் "வவுனியாவ உர்பன் கவுன்ஸில்" என்றும் "வவுனியாவ முனிசிப்பல் கவுன்ஸில்" என்றும் உள்ளது.

வரலாற்று ரீதியாக இந்த உள்ளூராட்சி மன்றத்தின் பெயர் தமிழில் "வவுனியா" என்றும், ஆங்கிலத்தில் "வவுனியா" என்றும் அறியப்பட்டும், பதியப்பட்டும் வந்துள்ளது. ஆங்கிலத்தில் "வவுனியாவ" என்று பிரசுரிப்பது தவறானதும், வரலாற்றுப் பிறழ்வானதுமாகும்.

"வவுனியா" என்ற தமிழ் பிரதேசத்தின் வரலாற்றுப் பெயரை "வவுனியாவ" என ஆங்கிலத்தில் அறியப்படுத்துவதோ, பதியப்படுவதோ தவறானது என்பதைப் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் கவனத்துக்குக் கொண்டு வந்து, "வவுனியா" என ஆங்கிலத்தில் உரிய திருத்தத்தை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கக் கோரும்படி கேட்டுக்கொள்கின்றேன் - என்றுள்ளது. (அ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 300 அரசாங்க ஊழியர்கள் வெளிநாடுகளுக்கு பயணம்

கொழும்பு, செப். 22

அரசாங்கத்தால் வெளியிடப்பட்ட சுற்றுநிருபத்துக்கமைய சுமார் 300 அரச ஊழியர்கள் வெளிநாடுகளுக்கு தொழிலுக்காக சென்றுள்ளனர் என பொது நிர்வாக, உள்நாட்டு அலுவல்கள், உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் மாகாண சபைகள் அமைச்சு தெரிவித்துள்ளது.

சேவை மூப்பை பாதிக்காத வகையில் அரச ஊழியர்களுக்கு 5 வருடங்கள் சம்பளமற்ற விடுமுறை வழங்கப்படுவதாக அரசாங்கத்தால் அண்மையில் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது. நாட்டில் தற்போது நிலவும் பொருளாதார நிலைமையைக் கருத்திற்கொண்டு அரச உத்தியோகத்தர்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களில் தொழில் புரிவதற்கோ அல்லது வேறு பயனுள்ள பணிகளில் ஈடுபடுவதற்கு வாய்ப்பை ஏற்படுத்தும் வகையில் குறித்த தீர்மானம் எடுக்கப்பட்டது. இந்நிலையில் சில அமைச்சுகள் மற்றும் திணைக்களங்களுக்கு உட்பட்ட 300 அரச ஊழியர்கள் வெளிநாடுகளுக்கு தொழிலுக்காக சென்றுள்ளனர் என்று அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (ச-இ)

## நெற்செய்கை பொதுக்கூட்டம்

சாவகச்சேரி, செப். 22

தென்மராட்சி தெற்கு, தனங்கிளப்பு கமக்கார அமைப்பின் காலபோக நெற்செய்கை பொதுக்கூட்டம் தனங்கிளப்பு பொதுநோக்கு மண்டபத்தில் நாளை 23ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது. அமைப்புக்குட்பட்ட அனைத்து உறுப்பினர்களும் கூட்டத்தில் கலந்துகொள்ள வேண்டும் என்று அமைப்பின் தலைவர் வே.பாலசுப்பிரமணியம் அறிவித்துள்ளார். (ச-9)

◆ ◆ ◆

சாவ.செப். 22

சாவகச்சேரி, நுணாவில் மேற்கு கமக்கார அமைப்பின் காலபோக நெற்செய்கைப் பொதுக்கூட்டம் நுணாவில் மேற்கு பொது நோக்கு மண்டபத்தில் நாளை 23ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது. இதன்போது அமைப்புக்குட்பட்ட அங்கத்தவர்களைக் கலந்துகொள்ளுமாறு தலைவர் க. பூபாலசிங்கம் அறிவித்துள்ளார். (ச-9)


## தேவை

பின்வரும் பணிகளுக்குப் பொருத்தமானவர்கள் தேவை.

- உதவிக்குருக்கள்
- அர்ச்சகர்
- பாகசாலைப் பணியாளர்

விண்ணப்பதாரிகள் 30.09.2022 திகதிக்கு முன் விண்ணப்பிக்கவும்.

### வாடகைக்கு

சுன்னாகம் நகரத்தில் கே.கே.எஸ். வீதியில் மூன்று மாடிக் கட்டடம் வாடகைக் குக் கொடுக்கப்படும்.

- கல்விச்சேவை
- மருத்துவ சேவைக்கு உகந்தது.

**நிர்வாகசபை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் தெல்லிப்பழை**

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கைதடி வடமாகாண சபையிலிருந்து 150 MTR. சித்த.ஆயுள்வேத அருகாமையில் 2 பரப்புக்காணி(சிவப்பு மண் .நல்ல தண்ணீர். நல்ல சூழல்)விற்பனைக்குண்டு.

**077 62 34 204**

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் கைதடி சந்திக்கு அருகாமையில் 02 பரப்பு (நிலபரப்பு) காணி விற்பனைக்கு உண்டு.**

- இரண்டு பரப்பாக பிரிக்கப் பட்ட நிலையில்.
- கைதடி சந்தியிலிருந்து 750 M தூத்தில்
- A09 வீதியில் இருந்து இரண்டாவது காணி.
- நல்ல தண்ணீர் ஊற்று நிலம்.
- குடியிருப்புகள் சூழ உள்ள காணி.
- 20 அடிப் பாதையுடன்

**076 7558 606**

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் இருபாலையில் 08 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்கு உண்டு.**

- பருத்தித்துறை வீதியில் இருந்து 1KM தூரத்தில்
- 2 பரப்பாக (நிலப்பரப்பு) பிரிக்கப்பட்ட நிலையில்.
- BH Lane விக்கினேஸ்வரா சனசமூக நிலையம் அருகாமையில்
- 18 அடி பாதையுடன் நல்லசூழல் நன்னீர் ஊற்று நிலம்
- யாழ்.நகரிலிருந்து 4Km தூரம்
- 1 பரப்பின் விலை (600000/=) ரூபா ஆறு லட்சம்
- பார்வையிடும் நேரம் காலை 9.00 தொடக்கம் 6.00 மணி வரை

**0772880152**
**0771488348**

## பணியாளர்கள் தேவை

யாழ்நகரில் இயங்கும் பிரபல முன்னணி நகைவியாபார நிலையத்திற்கு பின்வரும் பணியாளர்கள் தேவை.

- **கணக்காளர்:** A/L வர்த்தக துறையில் படித்த கணினி அறிவுடைய ஆண்/பெண். முன் அனுபவம் விரும்பத்தக்கது.
- **கணினி தரவு பதிவாளர்** (Data Entry Operator): (ஆண் / பெண்)
- **விற்பனை உதவியாளர்** : (ஆண் / பெண்)
- **சிட்டை எழுதுனர்:** வடிவான கையெழுத்து உடையவராக (ஆண் / பெண்)

சுயவிபரக் கோவையுடன் முற்பகல் 10.00 மணிமுதல் நேரில் வரவும்

**நியூ லலிதாஸ் ஜுவல்லறி**
இல.30,32, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
**077 224 5511**

## தேவை

வெல்டிங் வேலை அனுபவம் உள்ளவர்கள் தேவை

**074 018 4813**

## ENGLISH

ஆங்கிலம் பிரத்தியேக வகுப்புகள்
உங்கள் வீட்டிற்கு வந்து கற்பிக்கப்படும்.

**077 658 9443**
K.Sivathasan யாழ்ப்பாணம்

## வேலையாள்கள் தேவை

உணவகம் ஒன்றிற்கு பின்வரும் பணிக்கு ஆள்கள் உடனடியாகத் தேவை.

1. சமையற்காரர் (Chef)
2. ரொட்டி தயாரிப்பவர் (Rotti maker)

(cs 20877) (2.6) **076 679 5667**

## தவறவிடப்பட்டது

கடந்த 20.09.2022 தாவடி சந்திக்கும், சுதுமலை அம்மன் கோயிலிற்கும் இடையில் ஆடைப்பொதி ஒன்று தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுப்பவர்கள் தந்து உதவுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

**076 6027 624 / 077 9911 025**

## தவறவிடப்பட்டது

I PHONE ஒன்று நேற்று மாலை யாழ் அரசடி சந்திக்கும் நல்லூர் பின் வீதிக்கும் இடையில் தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் தந்து உதவுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன். (சன்மானம் வழங்கப்படும்)

தொடர்பு - **077 7485 742**

## முதலாம் ஆண்டு நினைவு

### அமரர் கிட்டிணன் பரஞ்சோதி

(ஆண் தாதிய உத்தியோகத்தர், யாழ்.போதனா வைத்தியசாலை)



திதி-துவாதசி

பிறப்பு 16.02.1943 இறப்பு 03.09.2021

நீங்காத நினைவுகள் தந்து
நீண்டதூரம் சென்று
ஆண்டு ஒன்று கடந்தாலும்
ஓயவில்லை உங்கள் நினைவுகள்
பார்த்த விழிகள் தேடுகின்றன
ஆறாது உங்கள் நினைவுகள்
அழியாது உங்கள் புன்னகை
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

**இக்கிரானை**
**கந்தரோடை, சுன்னாகம்.**

(cs 20864) (2.6)

## 1ஆம் ஆண்டு நீங்காத நினைவில்

மண்ணில் 23 . 02 . 1939



விண்ணில் 04 . 09 . 2021

### அமரர் சின்னப்பொடி இராசரத்தினம்

அப்பா என்ற அருமருந்து எம்மிடம் அருகிப்போனது
அன்புமட்டும் துளிர்த்து நிற்கிறது
ஊனோடும் உடம்போடும் போராடி
எமை வளர்த்த தெய்வம்
எம் கனவுகளுக்கு தீனி போட்ட காவலன் எங்கள் அப்பா

நீர் எமை விட்டுப்போனாலும்
உம் நிழல்கள் எமை தொடர்கிறது
உங்கள் நினைவுகள்
எம் நெஞ்சை பிளக்கிறது
ஆண்டு ஒன்று கடக்கையிலே
அடிவயிறு நோகிறது அப்பா என்றழைக்க
இனி யாரை நாம் தேடுவோம்

உங்கள் அன்பை கண்ணில் ஒற்றி பூசை செய்கிறோம்
எழுந்து வாருங்கள் அப்பா எமக்காக ஒரு நாள்......

இன்று (22.09.2022) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனை தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இல. 114 ஆனந்தபுரம் மேற்கு**
**(துளசி புகைப்படக் கலையகம்**
**கிளிநொச்சி)**

**குடும்பத்தினர்**

(cr.38118) 2.6)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 22.09.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.